
www.tamilarangam.net

# தமிழீழம்

குரல் 5 ஜூலை 88 10 பிராங்

வெளியீடு : அரசியல் பிரிவு தமிழீழ விடுதலைப்புலிக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியாவின் சுயநல
ஒப்பந்தத்திற்கு விலை
ஈழத்தமிழரின் ரத்தம்

# புலிகளின் குரல்

## வடக்கு — கிழக்கு

○

இன்றைய கட்டத்தில் வடக்கு - கிழக்கு, இணைப்பு பற்றிய விடயம் முக்கியம் பெற்று விளங்குகின்றது. பல பத்திரிகையாளர்கள், உலக மக்கள் இவ் இணைப்பு பற்றி எம்மிடம் வினா எழுப்பி வருகின்றார்கள். நாம் வடக்கு வேறு கிழக்கு வேறு என்று எப்போதும் வேறு படுத்திப் பார்த்ததில்லை. நாம் வடக்கு கிழக்கு பகுதிகளை ஒன்றுசேர்த்தே ஒட்டுமொத்தமாக தமிழீழம் என்று தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக போராடி வருகின்றோம், மாகாண சபை எனும் தீர்வு எமது போராட்டத்துக்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம் வைக்கும் ஒரு தீர்வு என்றே கொள்ளலாம்.

எம்மை பொறுத்தவரை வடக்கு - கிழக்கு இணைப்பு ஒரு விவாதத்துக்கு எடுத்துகொள்ளக்கூடிய, விவாதத்துக்குரிய, அல்லது பேசி இணக்கம் காணப்படக்கூடிய விடயம் அல்ல; வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது விவாதத்துக்குரிய விடயமாகும் பட்சத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அமைதிக்கான எந்த முயற்சியும் பயனளிக்காது என்று தான் சொல்ல முடியும்.

ஒப்பந்தத்தின்படியே பார்த்தாலும் வடக்கு - கிழக்கு இணைப்பு உறுதி செய்யப்படுகின்றது. ஆனால் தந்திர திரு. ஜெயவர்த்தனா ஒரு வருடத்தின் பின் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும் என்று அறிவித்து வருகின்றார். பொதுஜன வாக்கெடுப்பானது ஒட்டு மொத்தமாக வடக்கு - கிழக்கு பகுதியில் வைக்கப்பட வேண்டுமே ஒழிய பல காலங்களாக திட்டமிட்டே கிழக்குப் பகுதியில் சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப் பட்ட பின்பு முஸ்லீம் மக்களையும் எம்மையும் பிரிப்பதற்கு காலங்காலமாக முயற்சி எடுத்துக்கொண்டு கிழக்குப் பகுதிக்கு மட்டும் சர்வஜன வாக்கெடுப்பு வைப்பது என்பது தமிழர்களின் நாட்டை துண்டாடும் முயற்சியென்பதை அனைவரும் அறிந்துகொள்ளலாம்.

## பொன்னம்மான்!

★

யாகப் பயணத்தை
தொடங்கினாய்
கெஞ்சமாட்டோம்
என
துளுரைத்தாய்.
நீதான்.........

புதிய உலகுக்காய்
புறப்பாடு செய்து
புரட்சி மறவர்களுக்கு
பயிற்சிப் பாசறைகள்
நிர்மாணித்தாய்.

நெருப்புப் பூக்களுக்கு
விதை போட்டவனே!
எங்கள் இரத்தத்தால்
உன் பயிரை
வளர்க்கிறோம்......

பாலைவனப் படுக்கைகளிலே
நீ [illegible]
அக்கினிப் [illegible]
நாளை மலரும்.
நாளை மலரும்.

www.tamilarangam.net



# நீ எங்கள் நினைவு

★

பத்மநாபா……
இனிய
தோழனே!

உனக்கு எழுதாத
கவிதையா?

தமிழீழத்தில்
நீ
ஆழப்பாய்ந்த
தமிழ்நாட்டு
வேர்.

எமக்காக
ஓடி
உழைத்த
உன் கால்களால்
நாங்கள்
நடக்கிறோம்.

கேரளத்தின்
மேடு பள்ளமான
ரப்பர் காடுகளிலே……

கன்னியாகுமரி
அலைகடல் ஓரம்
கொதிக்கும்
வெயிலில்……

தஞ்சை வயல்களின்
புழுதியோடு
புழுதியாய்……

கோவையின்
குளிர்ந்த
காலைப் பனியிலே……

தோழா!
உன்
கால் படாத இடம்
தமிழ் நாட்டில்
எது?

உன்
சட்டைப்பையில்
பிரபாகரனின்
படம்
குடியிருந்தது.

அலைந்தாய்……

புலிகளுக்காக
நீ
சிந்திய
வியர்வை
ஒரு
போராளியின்
இரத்தமே!

நண்பா!

உன்னை எண்ணிக்
கவலைப் படாத
உன்னை எண்ணிக்
கவலைப்படுகிறோம்.

எத்தனை
அலைச்சல்…

பல்துலக்க
முகம் கழுவ
குளிக்க
உனக்கு
நேரம் இருக்கவில்லை,

நாங்கள் உன்
அழுக்கு உடையில்தானே
உன்
தூய்மையைக் கண்டோம்.

இனிய
தோழனே!

நீ
வாழ்ந்த
நொடிகள்
எங்கள் வாழ்வின்
பல்லாண்டுகள்

என்றைக்கும்
நீ
எங்கள்
நினைவு.

---

தோழர் திருச்சி பத்மநாபன் 13-3-88-இல் வீதி விபத்தில் மரணமடைந்தார். அவர் மறைவின் 90-வது நாளைக் கண்ணீரோடு நினைவுகொள்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# .....குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும்......

O

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன், தமிழர் விடுதலைக் கூட்டணி யின் வரலாற்றுத் தவறுகளில் சிறப்பானதாக விளங்கியது மாவட்ட அபிவிருத்திச் சபை களை ஏற்றுக்கொண்டமை யாகும்.

''பிரபாகரன்'' போன்றோர் தமிழர் விடுதலைக் கூட்டணி யில் இருந்தபோது ஒரு ஏற் பாடாக மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்படுத்தினார்கள். ஆனால் அந்த சபைகளுக்கு அதிகாரம் இல்லாததினால் விரக்தியால் அவர்களது போக்குக்கு மாறுபட்டுப் போய் விட்டார்கள்.'' (விசிட்டர் பேட்டி) என்று இன்று வர லாற்றை திரித்துப் பேசுகிறார் அமிர். பாவம் நீண்ட காலம் சென்னையிலேயே தங்கிய மையால் கடந்த கால வர லாறுகள் கூட மறந்துபோய் விட்டது. அவர் முன்னால் ''தமிழீழம்'' என்று உச்சரித் தால் ''இந்தச் சொல்லை எங்கேயோ கேட்ட மாதிரி இருக்கிறதே?'' என்று கேட் கும் நிலையில் தான் இருக் கிறார். எமது மண்ணும், மண்ணின் துயரங்களும் சென்னை வாசத்தினால் அமிருக்கு மறந்துவிட்டா லும், எமது மக்கள் சில விடயங்களை மறந்திருக்க மாட்டார்கள் என்பதால் மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றுக் கொள்ள முன்னும் ஏற்றுக்கொண்ட காலத்திலும், அதற்குப் பின் னரும் நடைபெற்ற விடயங் களை இன்று பின்னோக்கிப் பார்ப்போம். உங்களை 1977-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் களத்துக்கு அழைத்துச் செல் கிறோம், ''பாலம் போட்டுத்தர மாட்டோம்'' ''ரோட்டு போட்டுத் தரமாட்டோம்'' ''தமிழீழத் தேசிய மன்றம் அமைப்போம்'' என்ற அட்ட காசமான மேடைப் பேச்சுக்கள் நிகழ்த்தப்பட்டன. ''இதெல் லாம் சாத்தியமா?'' என்று கேட்டவர்களுக்கு ''அவங்க படிச்சவங்க இல்லையா?'' அவங்க சொல்றது சரியாத்தான் இருக்கும்'' என கூட்டணியின் பக்தர்கள் பதிலிறுத்தார்கள்'' ''அடுத்த மேதினம் தமிழீழத் தில். அடுத்த தேர்தல் தமிழீழத் தில், சிறீலங்கா நாடாளு மன்றத்துக்கு போவதற்கு நாம் எதிர்நோக்கும் கடைசித் தேர்தல் இது!'' என்று வீர முழக்கமிட்ட போதெல்லாம் ''அப்படியா?'' எனக் கேட்டவர் களுக்கு

''ஆம், பழம் பழுத்தால் வெளவால் வரும்'' என்றார்கள். ஆனால் இப்போதோ, இவர் களுடைய பங்களிப்பின்றியே போராட்டம் வலுவடைந்தது. இப்போது வெளவாலை எதிர் பார்த்த தமிழ் மக்களுக்கு அப்பத்தைப் பங்கிட வந்த குரங்கைக் காட்டி ''இதோ உங்கள் இரட்சகர்கள்'' என் கிறார்கள். பாம்பின் நிழலில் படுத்துறங்கச் சொல்கிறார்கள். கசாப்புக் கடைக்காரனை ஜீவகாருண்ய சங்கத் தலைவ ராக்குகிறார்கள். இப்படி யானவர்களெல்லாம் வரப் போகிறார்கள் என்று தெரிந்து



www.tamilarangam.net



தானோ என்னவோ ''கோயபல்ஸ்'' போன்றோர்களெல்லாம் நேரகாலத்தோடு செத்துத் தொலைந்துவிட்டார்கள்.

1977-ம் ஆண்டில், பாராளுமன்ற ஆசனங்களைப் பெறுவதற்காகத் தான் இவர்கள் இப்படி முழக்கமிடுகின்றார்கள். இவர்களுக்கு உண்மையிலேயே தமிழீழம் என்ற இலட்சியத்தில் கொஞ்சம்கூட நம்பிக்கையில்லை என்பதைப் புரிந்துகொள்ளாத தமிழ் பேசும் மக்கள் தமிழீழ இலட்சியத்தின் பெயரால் இவர்களைப் பாராளுமன்றம் அனுப்பினார்கள்.

தமிழீழ இலட்சியத்தை பாராளுமன்றத்தில் எதிரொலிப்பார்கள் என எதிர்பார்த்தனர். ஆனால் இவர்களோ சிராவஸ்தி ஊழியர்களின் உத்தியோகபூர்வ பேச்சாளர்களாக மாறினர். எதற்கும் அஞ்சாதவர்கள் என எதிர்பார்க்கப்பட்டவர்கள் பிரதம[illegible] புன்னகையில் மயங்கினார்கள்.

சிறீலங்கா அரசு வழங்கிய குளிரூட்டப்பட்ட காரில் மெய்ப்பாதுகாவலரோடு பவனி வந்த அமிர்தலிங்கம் தமிழீழ இலட்சியத்திற்கு முழுக்கு போட்டுவிட்டதை பகிரங்கமாக ஒப்புக்கொள்ள முன் வரவில்லை. அதற்குப் பதிலாக, எமது பகுதியை அபிவிருத்தி செய்யலாம், எல்லைகளைப் பாதுகாக்கலாம் என்று கூறி மாவட்ட அபிவிருத்திச் சபை என்னும் கானல் நீரை தமிழீழ மக்களுக்குக் காட்டினார்.

சோர்வுற்றிருந்த மக்களுக்கு குழையடிப்பதற்காக ''கிராம யாத்திரை'' என்ற திட்டத்தை அமுல்படுத்தினர் கூட்டணியினர். இது கிராம யாத்திரை அல்ல. தேர்தல் யாத்திரையே என மக்கள் புரிந்துகொண்டனர்.

நிலைமையை உணர்ந்த பல அறிஞர்களும், இளைஞர்களும், கூட்டணியினருக்குப் பல அறிவுரைகள் கூறி மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்க வேண்டாமெனக் கோரினர். ஆனால் எதையும் கேட்கும் நிலையில் அவர்கள் இல்லை.

○ மாவட்ட அபிவிருத்திச் சபை பற்றிய கூட்டணியினரின் விளக்கங்களைக் கேட்ட மக்கள் தலையைப் பிய்த்துக்கொள்ளத் தொடங்கினர். உதாரணத்திற்கு கூட்டணியினரின் சில கருத்துக்களைத் தருகிறோம்.

★ அற்ப சலுகைகளுக்காக, அரைமந்திரி, முழுமந்திரி, மாவட்ட மந்திரி பதவிகளுக்காக எமது எதிர்காலச் சந்ததியின் நலனுக்கு குழிபறிப்பது நியாயமாகுமா? (மல்வத்தை கிராம வரவேற்பில் அமிர் 11-5-80 சுதந்திரன்).

★ மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலம் நாம் எமது தமிழீழ இலட்சியத்தை அடையப் பாடுபடுவோம் (மன்னாரில் அமிர் 12-5-81 வீரகேசரி).

★ மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் அடிப்படைத் தமிழீழ இலட்சியத்தை அடைய ஒருபோதும் முடியாது. (சுதந்திரக் கட்சி அலுவலக கருத்தரங்கில் இரா சம்பந்தன் 12-5-81 தினபதி).

★ எமது இலட்சியப் பயணத்திற்கு இதனைக் கருவியாகப் பயன்படுத்தலாம் என்ற நம்பிக்கை எமக்குண்டு (சு. நடராஜா தினபதி 12-5-81).

★ திரு. அமிர்தலிங்கம் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கும் நமது இலட்சியத்திற்கும் தொடர்பு இல்லையென்று விளக்கினார் (இரா. சம்பந்தன் 30-4-81 வீரகேசரி).

★ கூட்டணி ஆதரவளிக்கத் தவறினால் நிச்சயமாக அது சட்டமாகாது. (16-8-80 வவுனியா பொதுச்சபைக் கூட்டத்தில் அமிர் 20-8-80 சுதந்திரன்).

★ இந்த அபிவிருத்திச் சபைகளை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இது வந்தே தீரும். (த. இராசலிங்கம் 18-9-80 தினகரன்).

★ எமக்கு நியாயமான ரீதியில்தான் அபிவிருத்திச் சபையைக் கேட்டோம். அதற்கு அவர்கள் தருகிறார்கள். (அமிர் 7-10-80 வீரகேசரி).

★ அபிவிருத்திச் சபைகளை கூட்டணி எம். பி.க்களோ அல்லது தலைவர்களோ தாமாகவே ஏற்றுக்கொள்ளவில்லை. (இரா. சம்பந்தன் 15-9-80).

★ தந்தை செல்வா விரும்பிய பிரதேசப் பாதுகாப்பு இச்சட்ட மூலம் கிடைப்பதாலும் நாம் மாவட்ட அபிவிருத்திச் சபை மசோதாவை ஆதரிக்கிறோம். தந்தை செல்வா 20 வருடங்களாக

www.tamilarangam.net



'எதைச் சாதிக்க நிலைநாட்ட முயன்றாரோ இன்று நாம் அதைச் செயற்படுத்த முயன்று வருகிறோம். (27-8-80 அமிர்).

★ எம்மை நோக்கியுள்ள அரசியல் பிரச்சனைகளுக்கு மாவட்ட அபிவிருத்திச் சபைகளினால் தீர்வு காணமுடியாது. (13-8-80 சுதந்திரன் - மட்டுவில் கருத்தரங்கில் வி. என். நவரட்ணம்).

★ எமது பிரதேசத்தை அழிய விடவேண்டுமா? கடமையை நன்கு உணர்ந்ததினாலேயே மாவட்ட அபிவிருத்திச் சபை மசோதாவை ஆதரித்தோம். (27-8-80 வீரகேசரி - அமிர்).

★ மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அரசாங்கத்தின் பயனற்ற முயற்சிகளில் ஒன்றாகும். மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மாவட்டங்களின் விருத்திக்கோ அன்றேல் மக்களின் வாழ்வை உயர்த்தவோ பயன்படும் என எதிர்பார்க்க முடியாது. (1-8-80 வீரகேசரி எக்ஸ். எம். செல்லத்தம்பு).

★ எமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாவட்ட அபிவிருத்திச் சபைகள் நமக்குக் கிடைத்த வரப்பிரசாதம். (அமிர் 6-10-80 வீரகேசரி).

★ அபிவிருத்தியும், தமிழீழ விடுதலைப் போராட்டமும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போக முடியாதவை. அடிமைத்தனத்தைத் துடைத்தெறியாமல் அபிவிருத்தி பற்றிப் பேசுவது தமிழீழத்தின் அழிவிலேயே போய் முடியும். (மகாவளவுக் கூட்டத்தில் கதிரவேற்பிள்ளை).

இவ்வாறு தமக்கே விளக்கம் இல்லாமல் கூட்டணியினர் ஏனையோருக்கு விளக்கம் அளிக்கையில் இது பற்றிய உண்மை நிலையினை தமிழீழ விடுதலை அணியினரும், சுதந்திரன் பத்திரிகையும் வெளியிட்டு வந்தன. கூட்டணியினர் மாவட்ட அபிவிருத்திச் சபையினை ஏற்றுக்கொண்டதுபற்றி FORWARD பத்திரிகை பின்வருமாறு குறிப்பிட்டது.

''பிரதேச சுயாட்சிக்கும் மிகவும் குறைந்த ஒன்றான மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தனது சம்மதத்தை தெரிவிக்குமாயின் அது கூட்டணி தனக்குத்தானே குழி பறிப்பதாகவே அமையும்.'' (15-7-80) யாழ் பல்கலைக் கழகத்தினரைச் சந்தித்த கூட்டணியினர் மாவட்ட அபிவிருத்திச் சபை பற்றி விளக்கம் அளிக்க முற்பட்டனர். அவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளில் ஒன்றுமே இல்லை என்பதனை கூட்டணியினருக்கு உணர்த்தினர். பதவி மோகம் கண்ணை மறைத்த நிலையில் ஆத்திரமடைந்த அமிர்தலிங்கம் ''நீங்கள் எல்லாம் குழப்புவதற்கென்றே இருப்பவர்கள்'' என சபித்துவிட்டுச் சென்றார். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்ற பழமொழி நிதர்சனமாயிற்று.

கிராம (தேர்தல்) யாத்திரையின்போது இளைஞர்கள் ஆங்காங்கே கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். பதில் சொல்லத் தெரியாது பேந்தப் பேந்த முழித்த பின் அவர்களது பாரம்பரியப் பதிலான ''நீங்களெல்லாம் அரசின் கைக்கூலிகள்'' என்று கூறிவிட்டு நழுவினர். மாவட்ட அபிவிருத்திச் சபை தொடர்பான விளக்கங்களை அளிக்கும் புத்தகங்களை விற்பனை செய்த இளைஞர்கள் S. S. O. பதவிகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கூட்டணியின் தொண்(குண்)டர்களால் தாக்கப்பட்டனர்.

இக்காலகட்டத்தில் மானிப்பாய் எம். பி. தர்மலிங்கத்தின் ஜப்பான் ஜீப் இனந்தெரியாத இளைஞர்களினால் தீக்கிரையாக்கப்பட்டது. (மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தமிழீழப் போராட்டப் பாதையின் தங்குமடம் என தர்மலிங்கம் விளக்கமளித்திருந்தார்) ''தங்கு மடங்கள் வேண்டாம்! தமிழீழமே வேண்டும்!'' என்று இளைஞர்கள் கூறினர்.

''நாம் ஏற்றிவிட்ட இளைஞர்கள் இன்று உயரத்துக்குப் போய் இறங்க முடியாமல் நிற்கிறார்கள்'' (ஊறணியில் கிராமயாத்திரை பேச்சு - துரைரட்ணம் 3-3-81) என்று சலித்துக் கொண்டனர் கூட்டணியினர்.

இந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகள் எதற்காக உருவானவை? இவற்றிற்கு என்ன அதிகாரங்கள் உள்ளன என்பது [illegible] நிலையில் தமிழ் [illegible] நின்றனர். அப்போ[illegible] அபிவிருத்திச் ச[illegible] அதிகாரங்கள்பற்றி ஜனாதிபதி மாளிகையிலிருந்து 22-8-80 அறிக்கையொன்று வெளியானது.

1. மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அந்தந்த மாவட்டங்களின் அபிவிருத்தித் திட்டங்

களையிட்டு ஆலோசனை கூற மட்டுமே உரித்துடையன. அவற்றைச் செயற்படுத்தும் அதிகாரம் அவற்றிற்குக் கிடையாது. மாநகர சபைகளுக்கும் நகரசபைகளுக்கும் இருக்கும் நிறைவேற்று அதிகாரம் கூட அபிவிருத்திச் சபைகளுக்குக் கிடையாது.

2. ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் மாவட்ட அமைச்சரே மாவட்டங்களின் தகுதி வாய்ந்த அதிகாரியாக இருப்பர். ஜனாதிபதியால் நியமிக்கப்படும் மாவட்ட அமைச்சரிடமும் நிறைவேற்றுக் குழுவிடமுமே நிறைவேற்று அதிகாரம் இருந்து வரும்.

3. அவசிய மேற்படுமிடத்து மாவட்ட அமைச்சரையும், நிறைவேற்றுக் குழுவையும், மாவட்ட அபிவிருத்திச் சபையையும் கலைத்துவிடவோ, நீக்கிவிடவோ ஜனாதிபதிக்கு பூரண அதிகாரம் உண்டு.

4. பௌத்த புனித நகரங்களின் நிர்வாகம் மத்திய அரசிடமே தொடர்ந்து இருந்து வரும். கலாச்சார அமைச்சே இவற்றைப் பாதுகாக்கும்.

* மத்திய அரசின் சட்டதிட்டங்களுக்கு எந்த ஒரு மாவட்ட அபிவிருத்திச் சபையாவது பணிந்துபோக மறுத்தால் அரசாங்கம் அவற்றைக் கலைத்துவிடும்.

5. மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தமது ஒவ்வொரு ஆலோசனைகளையும் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் கலந்தாலோசித்தே செய்ய வேண்டும்.

6. எதாவது தவறான தீர்மானமொன்றை மாவட்ட அபிவிருத்திச் சபை முன்மொழிந்து, அதைச் சம்பந்தப்பட்ட மாவட்ட அமைச்சரும் உள்ளூராட்சி அமைச்சும் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்ற சூழ்நிலை ஏற்படுமானால் ஜனாதிபதி மாவட்ட அமைச்சரையும், உள்ளூராட்சி அமைச்சரையும் பதவி நீக்கம் செய்து சம்பந்தப்பட்ட மாவட்ட சபையைக் கலைத்து விடுவார்.

7. அபிவிருத்திச் சபைகளால் புத்த சாசனமோ, புத்த சங்கத்தின் பாரம்பரிய உரிமைகளோ பாதிக்கப்படமாட்டாது.

8. வரிகளை அறவிடுதல், காணிகளை குத்தகைக்கு விடுதல், காணிகளை அல்லது சொத்துக்களை விற்றல் என்பன வற்றை உள்ளூராட்சி அமைச்சரும், நிதியமைச்சரும் அங்கீகரித்த பின்னரே அபிவிருத்திச் சபைகளின் நிறைவேற்றுக்குழு செயற்படுத்த முடியும்,

9. மாநகர சபைகளுக்குத் தாம் சேகரிக்கும் பணத்தை தாம் விரும்பியபடி செலவிட இருக்கும் உரிமைகூட அபிவிருத்திச் சபைகளுக்குக் கிடையாது.

10. முந்திய அரசுகள் மாவட்ட சபைகளுக்கு நிறைவேற்று அதிகாரங்கள் வழங்க முன்வந்தன. நாம் அதைச் செய்யவில்லை

11. அரசியல் அமைப்பில் கூறப்பட்ட மொழிக் கொள்கையே அபிவிருத்திச் சபைகளிலும் அமுல் செய்யப்படும்.

இவ்வளவு தெட்டத் தெளிவாக, இவை யானை உண்ட விளாங்கனிகள் தான் என்பதைப் புரியப்படுத்தினார் ஜெயவர்த்தனா. எனினும் இவைகள் பற்றிய தமது சந்தேகங்களை நிவர்த்தி செய்ய ஜனாதிபதியைச் சந்தித்தனர் புத்த பிக்குகள். இந்நிகழ்ச்சி பற்றி ஜனாதிபதி பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''புத்த பிக்கு 'இப்போது எனக்கு விளங்குகிறது. இது ஜனாதிபதியின் அதிகார விஸ்தரிப்புதான்' என்று ஒப்புக்கொண்டார். அது தான் உண்மை என்று அந்தப் புத்த பிக்குவிடம் நான் கூறினேன்.''-Daily News 25-8-80).

ஜனாதிபதியை பொறுத்த வரை உண்மை நிலை என்ன என்பதை சிங்கள மக்களுக்குத் தெளிவாகத் தெரிவித்துவிட்டார். ஆனால் தமிழ் மக்களின் காதில் பெரிய பூமாலையே சுற்றினர் கூட்டணியினர். தென்னிலங்கையில் உள்ள சிங்கள அரசியல்வாதிகளையும், பௌத்த குருமாரையும் திருப்திப்படுத்தவே மாவட்ட அபிவிருத்திச் சபைக்குக் கிராமச் சபைக்குள்ள அதிகாரம் கூடக் கிடையாது என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூறியிருக்கிறார். இதைப் புரிந்துகொள்ளாத தம்பிமார் தான் ஜே.ஆர். கூறியதை உண்மையென்று நம்பிவிட்டார்கள்

(கோண்டாவிலில் வன்னிய சிங்கம் நினைவு கூட்டத்தில் மு. சிவசிதம்பரம் 28-9-80 சுதந்திரன்).

இந்நிலையில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் இடம்பெற்றன (தேர்தல் நடைபெற்ற லட்சணத்தையும் கூட்டணி ஜனநாயகத்தைத் தூக்கில் மாட்டியதையும் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம்.)

இதே வேளை மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் அதிகாரத்தைப் பற்றியும் கூட்டணியினர் அதனை ஏற்றது பற்றியும் ஐ. தே. கட்சியினர் என்ன கூறுகிறார்கள் என்பதை நோக்குவோம்.

''மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டமூலத்தில் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென்றோ,

www.tamilarangam.net

உரிமைகள் வழங்கப்படு மென்றோ உத்தரவாதம் அளிக்கப்படவில்லை.'' (மட்டக்களப்பு 2-வது பாராளுமன்ற உறுப்பினர் பரீத்மீரா லெப்பை 13-5-81 வீரகேசரி) ''ஈழம் கேட்டவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபையைப் பெறப் போகிறார்கள்'' (வவுனியா மாவட்ட அமைச்சர் மகிந்த சோம 15-9-80 தினகரன்) ''தமிழ் மக்கள் அடிக்கடி தனிநாடு கேட்டுவந்த போதிலும் இன்று அக்கோரிக்கையை மறந்து சிங்கள மக்களுடன் ஒன்றாக வாழ இணங்கி அபிவிருத்திச் சபைச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (லயனல் ஜெயதிலகா 15-9-80 தினபதி) அபிவிருத்திச் சபை சட்ட மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது எனக்குத் தனிப்பட்ட முறையில் பரமதிருப்தியை அளிக்கிறது. அக்கட்சி பல ஆண்டுகளாக தனித் தமிழ்நாடு கோரிக்கையை வலியுறுத்தி வந்துள்ளது. அதிர்ஷ்டவசமாக அக்கால கட்டத்தை நாம் கடந்துவிட்டோம். (20-9-80 நியூயார்க்கில் பிரதமர் பிரேமதாசா) ''ஈழம் ஒன்றே இறுதி இலட்சியம் என்றவர்கள் இன்று அதுபற்றிப் பேசுவதே இல்லை. பிரிவினைக் கோரிக்கையை அவர்கள் கைவிட்டுவிட்டார்கள் (கல்முனையில் K.W. தேவநாயகம் 15-9-80 தினபதி).

ஆனால் தமிழீழக் கோரிக்கைக்குத் தாங்கள் ஈமக்கடன்களை முடித்துவிட்டதைப் பற்றி வெளிப்படையாக ஒப்புக்கொள்ள கூட்டணியினர் தயாராக இல்லை.

அத்துடன் ''ஒரு வண்டியை எவ்வளவு வேகமாகச் செலுத்த வேண்டும் என்பதை வண்டியோட்டிதான் தீர்மானிக்க வேண்டும். பின்னுக்கு இருக்கும் குப்பை கூளங்கள் அல்ல'' (1-5-81 மேதினப் பேச்சு 4-5-81 ஈழநாடு) எனத் திமிராக கூறினார் கூட்டணியின் தலைமை வண்டியோட்டி திரு. அமிர்தலிங்கம்.

செங்கோல் ஆலவட்டம் சகிதம் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைகள் ஏவ்வாறு செயற்பட்டன என்பதை நோக்குவோம்.

★ பிறிமா ஆலைப் பொருட்கள் மீதான வரிவிதிப்பு முயற்சி உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள் மீதான வரிவிதிப்பு முயற்சி என்பவற்றை திருமலை மாவட்ட அபிவிருத்திச் சபை மேற்கொள்ள முற்பட்டபோது அவை தடுத்து நிறுத்தப்பட்டன.

★ மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபை தேவநாயகம் சம்பந்தமூர்த்தியின் கொழுவலிலேயே காலத்தைக் கழித்தது.

★ வவுனியா கொக்கச்சான் குளம் பகுதியில் அமைச்சர் சிறில் மத்யூ தலைமையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெற்றது. (எல்லைகளைப் பாதுகாக்கவே இதனை ஏற்றதாகவும் கூட்டணியினர் சொன்னது குறிப்பிடத்தக்கது).

★ குச்சவெளி, மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகளில் சிங்கள மீனவர் குடியேற்றம் இடம் பெற்றது.

★ மட்டக்களப்பில் கெவிளியாமடு தாந்தாமலை, காஞ்சிரங்குடா பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் புத்த விகாரையொன்று தாந்தாமலையில் நிர்மாணிக்கப்பட்டது.

★ புன்னைக்குடாவில் 100 வீடுகள் கட்டி சிங்கள மீனவர் குடியேற்றம் இடம் பெற்றது.

★ இவ்வளவும் நடைபெறும்போது திஸ்ஸமகாராமவில் இருந்து 81 கலவரத்தில் அகதிகளான 16 குடும்பங்கள் திருக்கோவில், கஞ்சிகுடிச்சாறு பகுதியிலிருந்து 4-2-82-க்குள் வெளியேறுமாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஆரியரட்ணா கடிதம் அனுப்பினார்.

★ குமுளமுனை-குருந்தூர் மலையில் முருகன் கோவில் அடிவாரத்தில் விகாரை வேலை ஆரம்பிக்கப்பட்டது.

★ தொல்பொருள் ஆராய்ச்சியாளர் உதவியுடன் வவுனியா சமணங்குளம் பிள்ளையார் கோவிலை பௌத்த விகாரையாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

★ வவுனியா நகரசபைக்குச் சொந்தமான இடத்தில் சட்ட விரோதமாக வைக்கப்பட்டு சர்ச்சைக்குரியதாக விளங்கிய புத்தர் சிலை நிரந்தரமாக்கப்பட்டது.

★ மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அமுல்படுத்தப்படவில்லை. தீர்மானங்களை செயற்படுத்த அபிவிருத்திச் சபை செயலாளர் முயலவில்லை என்பதால் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர் [illegible]யினர். இவ்வளவிற்கும் இவ் அபிவிருத்திச் ச[illegible]ாகம் தமிழர் விடுதலைக் கூட்டணியி[illegible]யே இருந்தது.

★ கூட்டணியினரை மாவட்ட [illegible] சபையை ஏற்கவைத்து மூக்குடைய வைத்த[illegible] ஜனாதிபதி ஜே. ஆர். பெருமைப்பட்டுக் கொண்[illegible]. என்னை ஒரு தந்திரசாலியென்றும் இரகசியமா[illegible]டுபவன் என்றும் கூறுகிறார்கள். அரசிய[illegible] யோரிலோ அல்லது சாதாரண மனித வாழ்க்கையிலோ திட்டமிடாமல் இயங்க முடியுமா? திட்டமிட்டால் தலைவராக முடியுமா?' (Weekend) 6-12-81.

www.tamilarangam.net



ஆனால் இதற்குப் பிறகுதான் கூட்டணியினருக்கு காலங் கடந்து ஞானம் பிறந்தது. அதன்பின் அவர்களின் கூற்று பின்வருமாறு அமைந்திருந்தது.

**விரக்தியின் விளிம்பில்....!**

அபிவிருத்திச் சபைத் திட்டம் செயற்படுவது சாத்தியமில்லை. ஏனெனில் எமக்கு எவ்வித அதிகாரமும் தரப்படவில்லை. அதிகாரம் எதுவுமற்ற ஏவலாட்கள் போலவே நாம் இருக்கிறோம். எமது திட்டங்களைச் செயற்படுத்த எமக்கு நிதியும் தரப்படவில்லை. (28-10-82. Herald-International Tribune.)

○ அதிகாரங்கள் என்னவென்று தெரியாத நிலையில் மாவட்ட சபையில் நாங்கள் ஒட்டியிருக்கத்தான் வேண்டுமா? (பொதுச்சபைக் கூட்டத்தில் சம்பந்தமூர்த்தி 17-8-82. வீரகேசரி)

○ தமிழனுக்கு தமிழரசு கிடைத்தால்தான் தமிழ்ப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியுமே தவிர வேறு எந்த வகையிலும் முடியாது. (யாழ் நூலக அடிக்கல் நாட்டு விழாவில் D. D. C. தலைவர் நடராஜா.)

○ மாவட்ட அபிவிருத்திச் சபை என்று சொல்லி ஒரு அழகான பெரிய பானையை அதுவும் வெறும் பானையை அரசு எமக்குத் தந்துள்ளது (19-9-81 தினபதி சூசைதாஸன்).

○ இதுவரை எமக்குக் கிடைத்தது இந்த அழகான அறை ஒன்று மட்டும்தான். (Herald - International Tribune D. D. C. நடராஜா).

○ அபிவிருத்திச் சபை வெறும் காற்றடைத்த பை. அது ஒரு வெற்றுவேட்டு. (18-11-81. பட்ஜெட் விவாதத்தில் வவுனியா சிவா 25-11-81 சுதந்திரன்).

○ மாவட்ட அபிவிருத்திச் சபைகள் இறக்கையில்லாத பறவைகள் போன்றவை. (நீலன் திருச்செல்வத்துடனான சந்திப்பில் சம்பந்தமூர்த்தி).

○ ஒருவித அதிகாரமும் இருப்பதை என்னால் காண முடியவில்லை. (V. யோகேஸ்வரன் 25-10-81. சுதந்திரன்).

○ மாவட்ட அபிவிருத்திச் சபைகள் வெறும் வட்டம் என்பதை இப்போது உணருகிறோம். (அரியாலையில் மு. சிவசிதம்பரம் 9-2-82. தினபதி).

ஏற்கனவே கலாநிதி வில்சன் அவர்கள் கூட்டணியினருக்கு ஒரு எச்சரிக்கை விடுத்திருந்தார் ''முன் வைக்கப்படும் தீர்வு மக்களைத் திருப்தி செய்யத் தவறுமானால் இன்றைய பாராளுமன்றத் தலைமைப் பீடம் முற்றாக அகற்றப்பட்டு ''செய் அல்லது செத்துமடி'' என்று கூறும் தீவிரவாதத் தலைமை பொறுப்பேற்கும்'' இவரது கூற்றையே வரலாறும் நிதர்சனமாக்கியது.

ஆனால் கற்பனை உலகத்தில் வாழும் அமிரோ ''தமிழ் மக்களின் அரசியல் அதிகாரம்பெற்ற அரசியல் இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணிதான்'' (வீரகேசரி பேட்டி) என்று கூறி தமிழ் இளைஞர்களின் தியாகங்களில் குளிர்காய முனைகிறார்.

அதுமட்டுமல்லாது இன்று எமது விடுதலைப் போராட்டத்தை இத்தியாகங்களூடாகக் கொண்டு சென்ற விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இந்திய இராணுவத்திற்குப் பச்சைக் கொடி காட்டுகிறார்.

இவர்களுக்கு தமிழரசுக்கட்சி வெள்ளி விழா மலர் வாசகம் ஒன்றை நினைவுபடுத்துகிறோம்.

**''கட்சிகளுக்காக மக்கள் பலியாகக் கூடாது, மக்களுக்காக கட்சிகள் பலியாகட்டும்''.**

★★★

**''இந்தியா தமிழ் பேசும் மக்களின் முதுகில் குத்திவிட்டது. எனவே இந்த மாயமானாகிய ஒப்பந்தத்தை முறியடித்து தமிழீழத்தை அமைப்பதற்கு மக்களாகிய நீங்கள்தான் மகத்தான ஆயுதங்கள்.''**

— திலீபன்.

www.tamilarangam.net

# களத்தில்

## காவல் அரண் மீது தாக்குதல்

**16-4-88 :** முல்லைத்திவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு என்ற இடத்திற்கும் விசுவமடு எனும் இடத்திற்கும் இடையே அமைந்துள்ள காட்டுப்பகுதியில் எமது காவல் அரண் ஒன்று இந்தியப்படையால் தாக்கப்பட்டது. இத்தாக்குதலில் எமது வீரர்கள் இருவர் வீரமரணமடைந்தனர். வோக்கிடோக்கி, ஒன்றும், ஜீ 3 - சுரிகுழல் துப்பாக்கி ஒன்றும் எம்மால் இழக்கப்பட்டன.

## எமது இரண்டு போராளிகள் வீரமரணம்

**22-4-88 :** புதுக்குடியிருப்பு பகுதியில் காவல் அரணில் கடமையில் ஈடுபட்டிருந்த எமது இரு வீரர்கள் இந்திய இராணுவத்தால் சுடப்பட்டு வீரமரணம் அடைந்தனர். எமது வீரர்கள் வைத்திருந்த ரி. 56-ரக சுரிகுழல் துப்பாக்கிகள் இரண்டையும் இந்திய இராணுவத்தினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

## சூரி வீரமரணம்

**24-4-88 :** மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொம்மாதுறை என்ற இடத்தில் எமது முகாம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு இந்தியப் படையினரால் தாக்கப்பட்டபோது எமது வீரர் **சூரி** என்பவர் வீரமரணம் அடைந்தார்.

## இலங்கை கடற்படையினரால் கைது

**28-4-88 :** யாழ் மாவட்டத்தில் தொண்டமானாறு கடல் பகுதியில் படகு ஒன்றில் சென்று கொண்டிருந்த **லிங்கம், சேகர், ரோம், விஜயன், பாஸ்கர், உமாகாந்த்** ஆகிய 6 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்களுள் நால்வர் கொல்லப்பட்டுள்ளதாகவும் ஊர்ஜிதப் படுத்தப்படாத தகவல் ஒன்றும் கிடைத்துள்ளது.

## ஐந்து சிங்கள இராணுவம் பலி

**29-4-88 :** வவுனியா மாவட்டத்தில் உள்ள பாவற்குளம் என்னும் இடத்தில் இருந்து வவுனியாவிற்கு இலங்கை இராணுவத்தினர் சென்று கொண்டிருந்தபோது 1-ம் யூனிற் என்னும் இடத்தில் எமது கெரில்லா வீரர்களுக்கும், சிங்கள இராணுவத்திற்கும் இடையே சண்டை ஏற்பட்டது. இச்சண்டையின்போது 5 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 7 பேர் படுகாயம் அடைந்தனர். எமது வீரர்கள் தரப்பில் எந்தவிதமான சேதமும் இல்லை.

## கண்ணிவெடியில் IPKF வீரர் ஒருவர் பலி

**30-4-88 :** திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கொக்கு விழுந்தான் பகுதியில் ரோந்து சென்ற இந்தியப் படையினர் ஏற்கனவே இங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் சிக்கியபோது ஒருவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் பன்குளம் என்ற இடத்தில் உள்ள எமது முகாம் ஒன்றை சுற்றிவளைத்த இந்தியப் படையினருடன் நடந்த சண்டையின் போது எமது தரப்பில் **நாதன்** (மூன்றாவது முகாம்) **மோகன்** (உள்ளூர்) ஆகிய இரு வீரர்கள் வீரமரணம் அடைந்தனர்.

## எமது ஆதரவாளர் இருவர் கொலை

**4-5-88 :** அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று என்ற இடத்தில் எமது வீரர் ஒருவரும், எமது ஆதரவாளர்கள் இருவரும் வீதியால் சென்றுகொண்டிருந்த போது, அவ்வழியால் வந்த இந்திய இராணுவத்தோடு, கூடவந்த சில துரோகிகளால் எமது வீரர் காட்டிக் கொடுக்கப்பட்டபோது, இந்திய இராணுவத்தினர் அவர்கள்மீது தாக்கமுற்பட்டனர். அப்போது எமது வீரர் குண்டு ஒன்றை இந்திய இராணுவத்தினர் மீது வீசினார் அப்போது 3 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். எமது வீரர் சைனட் அருந்தி வீர மரணம் அடைந்தார். ஏனைய எமது ஆதரவாளர்கள் இருவரையும் இந்தியப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி என்ற இடத்தில் காட்[illegible] ஊடாக எமது வீர[illegible] சென்றுகொண்டிருக்[illegible] ஒளி[illegible] இந்தியப் படையினர் எமது வீரர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். மேலதிக விபரம் எதுவும் கிடைக்கவில்லை.

www.tamilarangam.net



மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமுலை எனும் இடத்தை இந்திய இராணுவத்தினர் சுற்றி வளைத்தபோது எமது வீரர் **விக்கி** சயனைட் அருந்தி வீர மரணம் அடைந்தார்.

## 2-வது லெப். நிதி வீர மரணம்

9-5-88: எமது வீரர்கள் இருவர் யாழ்நகர் நோக்கிச் செல்லுகையில் இந்திய இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டனர். அப்போது இந்தியப் படையினருக்கும் எமது வீரர்களுக்கும் இடையில் சண்டை ஏற்பட்ட போது எமது வீரர் 2-வது லெப். நிதி வீரமரணம் அடைந்தார். மற்றய வீரர் இராணுவத்தினரின் சுற்றி வளைப்பை முறியடித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

## தன்னைத்தானே சுட்டுக்கொண்டார் "வெங்கடேஷ்"

10-5-88: யாழ் மாவட்டத்தின் வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறையில் இருந்து வல்வெட்டித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த எமது வீரர்கள் இருவரை இந்திய இராணுவத்தினர் சுற்றி வளைத்தனர். அப்போது ஏற்பட்ட மோதலில் **வெங்கடேஷ்** என்ற எமது வீரர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு வீரமரணம் அடைந்தார். **ரவாஸ்** என்ற எமது மற்றைய வீரர் தன்னிடம் இருந்த எறிகுண்டை இராணுவத்தை நோக்கி வீசிய பின் 'சயனைட்' அருந்தி வீரமரணம் அடைந்தார்.

## இந்திய இராணுவம் அட்டகாசம்

13-5-88: வடமராட்சிப் பகுதியில் உள்ள வெற்றிலைக்கேணி என்ற இடத்தில் எமது வீரர் களுக்கும், இந்தியப் படைகளுக்கும் ஏற்பட்ட சண்டையின் போது எமது வீரர் **சுரேந்திரன்** என்பவர் வீரமரணம் அடைந்தார். இதனையடுத்து வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய இடங்களிலுள்ள மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்த இந்திய இராணுவத்தினர் 2 மாடி வீடுகளையும், ரூபா 1 லட்சம் பெறுமதி வாய்ந்த பொருட்களையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காயங்கேணி என்ற இடத்தில் எமது இயக்க உறுப்பினரான **தாபிர்** என்பவரை சமூக விரோதக் குழுவான திறீஸ்டார் குழுவினர் வெட்டிக் கொலை செய்துள்ளனர். இவருடன் சென்ற மற்றொருவர் தப்பிச் சென்றுவிட்டார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள பெரிய பண்டிவிரிச்சான். சின்னப்பண்டிவிரிச்சான், வெள்ளாங்குளம் ஆகிய இடங்களில் இந்தியப் படையினர் முகாமிட்டுள்ளனர். இதனால் அப்பகுதிகளில் வாழும் மக்கள் பீதியடைந்து காணப்படுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தங்கவேலாயுதபுரம், பனிச்சங்கேணி ஆகிய இடங்களில் இந்தியப் படையினர் குண்டு வீசியுள்ளனர். சேத விபரம் எதுவும் தெரியப்படவில்லை.

## "கிங்சிலி" வீர மரணம்

18-5-88: திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி என்ற இடத்தில் எமது வீரர் களுக்கும், இந்திய இராணுவத்திற்கும் ஏற்பட்ட சண்டையின்போது **கிங்சிலி** என்ற எமது வீரர் வீரமரணம் அடைந்தார். இந்திய இராணுவ தரப்பில் சேத விபரம் தெரியவில்லை.

## இரண்டு இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர்

19-5-88: திருகோணமலை மாவட்டத்தில் கும்புறுப்பிட்டி என்னும் இடத்தில் எமது கெரில்லா வீரர்கள் வைத்த கண்ணி வெடியில் இந்தியப் படையினரின் வாகனம் ஒன்று சிக்கியதால் 2 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். ஒரு உயர் அதிகாரி உட்பட 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

## ஜெயய், ஜீவா எறிகுண்டை வெடிக்கச் செய்து தம்மைதாமே அழித்துக்கொண்டனர்

21-5-88: யாழ் மாவட்டத்தில் வடமாராட்சிப் பகுதியில் வல்வெட்டித்துறை எனும் இடத்தில் எமது வீரர்கள் தங்கியிருந்த வீடொன்றை இந்திய இராணுவத்தினர் சுற்றி வளைத்தனர். இதனையடுத்து இருதரப்பினர்கும் சண்டை ஏற்பட்டதில், தப்பமுடியாத நிலையில் எமது வீரர் **ரமேஸ் மாஸ்டர்** சயனைட் அருந்தி வீர மரணம் அடைந்தார். **ஜெயய், ஜீவா** என்ற எமது வீரர்கள் தம்மிடம் இருந்த வெடிகுண்டை தமக்கு இடையே வெடிக்கச் செய்து வீர மரணத்தை தழுவிக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தினர் அப் பகுதியில் கண்மூடித்தனமாக சுட்டதில் 5 பிள்ளைகளின் தாய் கொல்லப்பட்டார், 5 குழந்தைகள் படுகாயம் அடைந்தனர்.

## இந்திய இராணுவம் சுற்றி வளைப்பு

22-5-88: திருகோணமலை மாவட்டம் மூதூர் பகுதியில் கிளிவெட்டிக்கும் தெகிவத்தைக்கும் இடையில் இந்திய இராணுவத்தினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ் மாவட்டம் கோண்டாவில் பகுதியில் இந்திய இராணுவத்தின் சுற்றிவளைப்பில் அகப்பட்ட **எட்ரிக்** என்ற எமது வீரர் சுற்றிவளைப்பை முறியடித்துக் கொண்டு தப்பிச் செல்ல முயன்றபோது, இராணுவத்தினரின் சூடுபட்டு தப்ப முடியாத நிலையில் கைத்துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுக்கொண்டு வீர மரணம் அடைந்தார்.

## ஐந்து இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்

*23-5-88:* யாழ் மாவட்டம், சாவகச்சேரி, எழுதுமட்டுவாள் பகுதியை அண்மித்த கிளாளி என்ற இடத்தில் எமது வீரர்கள் வைத்த கண்ணிவெடியில் சிக்கிய இந்திய இராணுவத்தினரின் ஜீப் வண்டி ஒன்று முற்றாகச் சேதமடைந்து, அதில் வந்த ஒரு லெப்ரினன்ட் உட்பட நான்கு இந்தியப் படையினர் கொல்லப்பட்டார்கள்.

மறுநாள் (24-5-88) இதே இடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த எமது வீரர்கள் மூவர்மீது, ஏற்கனவே அங்கு ஒளிந்திருந்த இந்தியப்படையினர், துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் கப்டன் **நகுலன் நிரேஸ்** ஆகிய எமது இரு வீரர்கள் வீர மரணம் அடைந்தனர். **தவம்** என்ற வீரர் காலில் சூடுபட்டு தப்ப முடியாத நிலையில் இராணுவத்திடம் பிடிபட்டுள்ளார்.

## இந்திய இராணுவத்தினர் 23 பேர் கொல்லப்பட்டனர்

*23-5-88:* முல்லைத்தீவு மாவட்டம், அலம்பில் என்ற இடத்தில் எமது முகாம் ஒன்றை இந்தியப் படையினர் சுற்றி வளைத்ததில் இரு தரப்பினருக்கும் பலத்த சண்டை மூண்டது. மூன்று நாட்களாக நடைபெற்ற இச் சண்டையில் இந்திய இராணுவத்தில் 23 பேர் கொல்லப்பட்டனர். 20 பேர் படுகாயம் அடைந்தனர். அதுவரை நடந்த சண்டையில் எமது தரப்பில் எதுவித இழப்பும் இல்லை.

## இரண்டு இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்

*24-5-88:* முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணிப் பகுதியில் 6-ம் கட்டை என்ற இடத்தில் எமது வீரர்களுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் பல மணிநேரமாக நடைபெற்ற பலத்த சண்டையில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயங்களுக்கு உள்ளானார்கள். எமது தரப்பில் எதுவித சேதமும் இல்லை.

## இந்திய இராணுவத்தினர் 35 பேர் கொல்லப்பட்டனர்

*27-5-88:* முல்லைத்தீவு மாவட்டத்தில் எமது வீரர்களுக்கும், இந்திய இராணுவத்திற்கும் தொடர்ந்து நான்கு நாட்களாக நடைபெற்ற, சண்டையில் இந்திய இராணுவ தரப்பில் 35 பேர் கொல்லப்பட்டார்கள். பலர் படுகாயமடைந்தார்கள். அதுவரை நடந்த சண்டையில் எமது வீரர்கள் தரப்பில் எதுவித இழப்பும் இல்லை.

## "பிரப்பர்" சயனைட் அருந்தி வீர மரணம்

*27-5-88:* அன்று சாவகச்சேரியை அண்மித்த கச்சாய் என்ற இடத்தை இந்திய இராணுவத்தினர் சுற்றிவளைத்தனர். இச்சுற்றிவளைப்பை முறியடிக்க முயன்ற ''பிரப்பர்'' எனும் விடுதலைப்புலி இராணுவத்தினரின் துப்பாக்கிக் குண்டுக்கு இலக்காகி தப்ப இயலாது சயனைட் அருந்தி வீர மரணம் அடைந்தார்.

## முல்லைத்தீவில் தொடர்ந்து ஆறு நாட்கள் சண்டை

*29-5-88:* கிளிநொச்சி மாவட்டம், வட்டக்கச்சி பகுதியில் புளியம்பொக்கணை என்ற இடத்தில் உழவு இயந்திரத்தில் வந்துகொண்டிருந்த இந்திய இராணுவத்தினரை எமது கெரில்லா வீரர்கள் கண்ணிவெடி வைத்து தகர்த்தார்கள். அதில் வந்துகொண்டிருந்த 15 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 9 பேரின் சடலங்களை எமது வீரர்கள் கைப்பற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து வட்டக்கச்சி பகுதியில் இந்திய இராணுவ ஹெலிகாப்டர்கள் கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தியதில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் உள்ளார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள நிந்தவூர் என்னும் இடத்தில் இந்திய இராணுவத்தின் சுற்றிவளைப்புத் தாக்குதலுக்கு இலக்காகி **றொஷான்** என்னும் எமது வீரர் வீரமரணம் அடைந்தார்.

முல்லைத்தீவு மாவட்டம், அலம்பில் என்னும் இடத்தில் எமது வீரர்களுக்கும், இந்திய இராணுவத்திற்கும் இடம்பெற்ற சண்டையில் 7 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள், கண்ணிவெடித் தாக்குதலில் பலர் படுகாயமடைந்தார்கள்.

www.tamilarangam.net



# ஆபிரிக்க ஐக்கிய சபையின் மாநாட்டுக்கு

## பிரபாகரன் வாழ்த்து

★

ஆபிரிக்க ஐக்கிய சபையின் இருபத்தி ஐந்தாவது வருடாந்த மாநாட்டுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. **வே. பிரபாகரன்** தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''இலங்கை வாழ் தமிழ் மக்களை எதிர் நோக்கியுள்ள, மிகவும் பாரதூரமானதும் இக்கட்டானதுமான ஒரு சூழ்நிலையை உங்களின் உடனடிக் கவனத்திற்கு இச்சந்தர்ப்பத்தில் கொண்டுவர விரும்புகிறோம். கடந்த நான்கு தசாப்தங்களாக அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள், இனக்கொலை மூலம் தமிழ் மக்களை ஒழித்துக்கட்டுவதற்கு கடைப்பிடித்து வந்த வன்முறையான கொடிய ஒடுக்குமுறைகளின் விளைவாகவே, சுயநிர்ணய உரிமைக்கும் நாட்டுக்குமான தமிழரின் போராட்டம் கிளம்பியது உங்களுக்குத் தெரிந்ததே. இலங்கையின் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன் இந்திய அரசு, ஜெயவர்த்தனாவின் ஆட்சியுடன் செய்து கொண்ட ''சமாதான'' ஒப்பந்தத்தைப்பற்றியும் நீங்கள் அறிவீர்கள். குறிப்பிடப்பட்ட ''சமாதான உடன்பாடு'' கைச்சாத்தாகி இன்று பத்து மாதங்கள் கடந்துவிட்டன. இந்த உடன்பாடு இன இணக்கத்தை ஏற்படுத்தி அமைதியை நிலைநாட்டும் என இந்திய, இலங்கை அரசுகள் ஆர்ப்பரித்து வந்தபோதும், தமிழர் தாயகத்தில் இன்னமும் போர் மேகங்கள் கவிந்துள்ளன''.

''ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அமைதியையும், நீதியையும் மீட்டுக் கொடுக்கும் என ஒப்பந்தம் உறுதியளித்தபோதும், தமிழ் மக்கள் தொடர்ந்தும் அளப்பரிய துன்பத்திற்கு உள்ளாகிவருவது ஒரு அவலம் நிறைந்த முரண்பாடாக உள்ளது. தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்து சலிக்காது குரல் கொடுத்துவந்த இந்தியா, தமிழ் மக்கள் தங்களின் பாதுகாவலனாகக் கருதிவந்த இந்தியா, இன்று தமிழ் மக்களின் ஒடுக்குமுறையாளனாக மாறியுள்ளதையிட்டு அம்மக்கள் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளனர். அமைதியை நிலைநாட்டவும், இனங்களிடையே சௌஜன்யத்தை உறுதிப்படுத்தவும், தமிழ் மக்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்காகவும் தமிழர் தாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட இந்திய அமைதிகாப்புப்படை, இன்று ஒரு ஆக்கிரமிப்புப் படையாக உருமாறி விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிராக ஒரு குரூரமான போரை நடத்திவருகிறது.

''நாம் ஒருபோதும் விரும்பாத ஒரு போரை இந்தியா எம்மீது திணித்துள்ளது. சமாதானத்தையும் இணக்கத்தையும் ஏற்படுத்த மீண்டும் மீண்டும் நாம் வேண்டுகோள்களை விடுத்துவந்த போதிலும் இந்திய அரசு பிடிவாதமாக இந்தப் போரை தொடர்கிறது. இந்தியாவின் இந்த நிலைப்பாடு நியாயமற்றது நீதியற்றது. அத்துடன் ஜனநாயகத்திற்குப் புறம்பானதும் ஆகும்.

''எனவே, இராணுவ அணுகுமுறையை கைவிட்டு சமாதான முறையில் பேச்சுவார்த்தை மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு இந்திய அரசை வற்புறுத்தும்படி ஆபிரிக்க ஐக்கிய சபைக்கும், அங்கத்துவ நாடுகளின் தலைவர்களுக்கும் வேண்டுகோள் விடுகிறோம். அத்துடன் தமிழ் மக்கள்பால் பரிந்துணர்வுகொண்டு அவர்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு செலுத்தும்படியும் இச்சபையைக் கேட்டுக்கொள்கின்றோம்.

அரசியற் பிரிவு,
**தமிழீழ விடுதலைப் புலிகள்**

www.tamilarangam.net



# விடுதலை உணர்வுகள்

## கொடை

'ட்ரக்' வண்டிகள் பின்னால்வர 'இந்தியப்படை' ஆட்கள் துப்பாக்கிகளோடு உலாவுகிறார்கள்.

எங்கும் பதட்டம்.

கொல்லப்பட்டவர்கள் பற்றிய சேதிகள் பரவிக்கொண்டிருக்கின்றன.

வேட்டுக்கள்.........பிணக்குவியல்.........குருதி ஓடை.........

யாழ்ப்பாணத்தில்—வழலைக் கிராமத்தில் இளைஞன் ஒருவன் நூல் நிலையத்தில் நண்பர்களோடு 'சீட்டு' ஆடிக்கொண்டிருக்கிறான்.

பொழுது போகவில்லை.

சிங்களப் படைகளை மோதிய காலத்தில் களத்தில் நின்றவன் அவன்.

'விடுதலைப் புலி'யாய் அவன் நடத்திய வீரப் போர்கள் பல.

இயக்கத்தின் உறுதியான கட்டுப்பாட்டை என்றைக்கும் அந்த இளைஞன் மீறியதில்லை.

ஆனால்.........

சிறிலங்கா - இந்திய உடன்படிக்கை வந்தபோது - எல்லாமே ஓய்ந்துவிட்டது போல ஆன நேரத்தில் - தலைவர்களின் ஒப்புதல் பெற்றுக் கொண்டு அவன் ஒதுங்கிவிட்டான்.

வீட்டில் சாப்பாடு - பெற்றவர்களோடு வாழ்க்கை - நண்பர்களின் உறவு.

தொலைவில் துப்பாக்கி வேட்டோசை முழங்கி ஓய்கிறது.

எங்கோ யாரோ கதறி அழும் ஓலங்கள்......

வெறிபிடித்த இந்தியப்படை கருக்கிய தமிழர் பிணங்களின் சாம்பல் பொடிகள் விண்ணில் எழுகின்றன.

இளைஞனோ 'சீட்டு' ஆடிக்கொண்டிருக்கிறான்.

அவன் எதிர்பார்க்கவில்லை......

யாரோ 'பளீர்' என்று கன்னத்தில் ஓங்கி அறைந்தபோது மூளை குழம்பிற்று.

நூல்நிலையத்துக்குள் இந்தியப்படை நுழைந்துவிட்டதா?

அதிர்ச்சியோடு தலையை நிமிர்த்துகிறான்......
அவன் தந்தைதான் எதிரில் நிற்கிறார்.

கண்களில் நெருப்பு.

"தமிழனுகளை இந்தியப்படை கொல்லுற நேரத்தில 'சீட்டு' ஆடுறியே......நீயும் ஒரு தமிழனோடா? விடுதலைப் புலிகள் வீரமாகப் போராடுகினமாம்......இந்தியப் படையின்ர 'டாங்கிகள்' எல்லாம் நொறுங்கிப் போட்டுதாம்......அவனுகள் அல்லோ தமிழன்கள்!"

திரும்பவும் அடிவிழ இளைஞன் திணறிப் போகிறான்.

"போய் பழையபடி பிரபாகரனுட்ட துப்பாக்கியை வாங்கிட்டுக் களத்தில நில்லு. வீட்டுக்கு வந்திடாத—...உனக்கு இனி வீட்டில சோறு கிடையாது......விளங்குதே?"

'விர்' என்று அவர் வெளியேறுகிறார்.

வழலை நூல்நிலையம் பின்பு அந்த இளைஞனைச் சந்திக்கவில்லை.

களத்தில் நிற்கிறானாம்.

பனைமரத் தோப்பில் அவனைத் துப்பாக்கியோடு யாரோ பார்த்ததாகச் சேதி.

## பலம்

வட்டுக்கோட்டைச் சந்திக்குச் செல்லும் பாதை.
ஒரு 'விடுதலைப்புலி' விரைவாகப் போய்க் கொண்டிருக்கிறான்.

சட்டைப்பையில் 'சயனைட்' புட்டி பத்திரமாக இருக்கிறது.

ஒவ்வொரு மணித்துளியும் சாவுக்குப் பக்கத்தில் இறுமாப்போடு நிமிர்ந்து நிற்கும் அந்த வீரன் போர்க்களத்தில் ஏதோ ஒரு கடமைக்காக விரைகிறான்.

எதிர்ப்புறமாக வந்த கிழவி ஒருத்தி பதட்டத்தோடு கையை நீட்டி அவனைத் தடுத்து நிறுத்துகிறாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திமிர்ந்து பார்க்கிறான்.

"தம்பி........வட்டுக்கோட்டைச் சந்தியிலை இந்திய 'ஆமி'க்காரன்கள் படுத்துக் கிடக்கிறாங்கள்மோனே......உந்தப்பக்கம் போகாதே அப்பூ..."

தளதளத்த குரல்.

கிழவி சொன்னது அவனுக்குப் புரியவில்லை.

தொடர்ந்து அதே திசையில் விரைவாக நடக்கிறான்......

இரண்டு அடிகள் வைக்கவில்லை. கிழவி தலையில் அடித்து 'ஓ!' என்று கதறும் ஓலம் அவன் கால்களை இழுத்து நிறுத்துகிறது.

ஏன் கிழவி அழுகிறாள்?

திரும்பி வருகிறான்.

"ஏனணை அழுறே?"

கிழவி அழுதுகொண்டே ஒவ்வொரு சொல்லாக அவனுக்கு விளங்கச் சொல்லுகிறாள் :-

"வட்டுக்கோட்டைச் சந்தியிலை......"

இப்போது அவனுக்குப் புரிகிறது.

"நீயெல்லாம் உயிரோட இருந்தாத்தான் மோனே உவனுகளோட போராடலாம்......"

கிழவி தொடர்ந்து அழுகிறாள்.

மேனி சிலிர்க்கிறது.

கண்களில் நீர் பனிக்க-கிழவியைக் கைகளால் அணைத்துக்கொண்டே அவன் எதிர்த்திசையில் திரும்புகிறான்.

நண்பர்களோடு பேசும்போது இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு இன்றும் அந்த விடுதலைப்புலி சொல்லிக்கொள்கிறானாம் :-

"இதுதான் எங்கள் பலம்."

## தெளிவு

துடியாய்த் துடிக்கிறார்.

இந்திய அமைதிப்படையின் 'செல்' தாக்குதலால் உடலெல்லாம் கிழிந்துபோய் ஒரு கிழட்டு உயிர் சாவோடு போராடுகிறது.

உரும்பிராயில் எல்லோருடனும் 'நல்ல மனிதராய்' வாழ்ந்துவிட்ட ஒருவர்.

செல்வா காலம் - சிவகுமாரன் காலம் - பிரபாகரன் காலம் மூன்றையும் தன் நீண்ட நெடிய வாழ்வில் நேரில் கண்டு - வீறுமிக்க ஒரு விடுதலைப் போரில் தன்னையும் எங்கோ சேர்த்துக்கொண்ட பெருமை.

நல்ல விடுதலை உணர்வாளர்.

அதிகம் பேசாத வாய்.

இத்தனை காலமும் சாவுக்குத் தப்பிய அந்த நல்லவர் இந்திய வெறிப்படையின் 'செல்' அடித்து இரத்த வெள்ளத்தில் கிடக்கிறார்.

கண்களில் நீர்பொங்கப் பக்கத்து வீடுகளின் சிறுவர்கள் - இளம் பெண்கள் - பெரியவர்கள்-தாய்மார்கள் - இளைஞர்கள் எல்லோரும் வளைத்து நிற்கிறார்கள்.

உற்றுப் பார்க்கிறார்.

பேசத் தோன்றுகிறது.

"கடைசியாகச் சொல்லுறன்... ஒருவரையும் நம்பாதீங்கோ. சிங்களவன் ஏசிக்கொண்டு எங்களை அழிச்சான். இந்தியா பாராட்டிக்கொண்டு அழிக்குது. தமிழர்களைத் தமிழர்கள்தான் காப்பாத்த வேணும்......விடுதலைப்புலிகளுக்குப் பின்னால் நில்லுங்கோ......"

எல்லோரும் அழுகிறார்கள்.

உரும்பிராயில் ஒரு நல்ல உயிர் அடங்கிற்று.

அடுத்த நாள்—

இளைஞன் ஒருவன் சாவீட்டில் பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்துச் சொன்னான்.

"பெரியவர் எங்களை உசுப்பிவிட்டுப் போகிறார்."

★★★

**"நான் என்னுடைய உரிமைகளுக்காகப் போராடுவது தேசத்துரோகம் என்றால் அதற்கான குற்றச்சாட்டை ஏற்று தூக்கு மேடை ஏறவும் நான் தயார்"**

**—கோமகன் வன்னியசிங்கம்**

www.tamilarangam.net

# உலகத்தின் பார்வையில்

'தெலுங்குதேசம்' கட்சி பஞ்சாப் நிலைமை முதல் சிறீலங்கா பிரச்சனைவரையிலான 25 தீர்மானங்களை நிறைவேற்றியது.

சிறீலங்காவைப் பற்றி முடிவெடுக்கும்போது-இந்திய அரசு அமைதிப் படையை சிறீலங்காவில் இருந்து திருப்பி அழைக்கவேண்டும் என்று 'தெலுங்குதேசம்' கட்சி மாநாடு தீர்மானித்தது.

THE HINDU
May 28, 1988

இந்திய அரசோடு சமாதானம் கொள்வது என்ற மன நிலையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளைத் தொடர்பு கொண்டு, 'ஆயுதங்கள் பறிக்கப் பட்ட நிலையில் - தளங்களெல்லாம் தகர்க்கப்பட்டு - விடுதலைப் புலிகள் கொல்லப்பட்ட நிலையில் - நிதி நிலைமை விழுந்துபோன நிலையில் - ஒரு பலவீனமான நிலையில்தான் நீங்கள் இந்திய அரசோடு சமாதானம்செய்துகொள்ள விரும்புகிறீர்களா?' என்று கேட்ட போது அவர்கள் சொன்ன பதில் இதுதான் :-

'நாங்கள் வீரர்களையும் கருவிகளையும் இழந்திருக்கிறோம் என்பது உண்மை. இது கெரில்லாப் போராட்டத்தில் தவிர்க்க முடியாததேயாகும். ஆனால் ஒரு வல்லரசைக்கூட எங்களால் எதிர்க்க முடியும் என்பதை நாங்கள் உலகத்துக்குச் செயல்வடிவில் எடுத்துக் காட்டி இருக்கிறோம். இன்று உயிருடனோ — பிணமாகவோ தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைப் பிடிக்கும் முயற்சியில் இந்திய அமைதிப்படை தீவிரமாக ஈடுபட்டிருப்பது தெரிகிறது.

INDIA TODAY
May 31, 1988

'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்க அரசியல் குழுவின் ஒரு முக்கிய உறுப்பினரான தினேஷ் (இது உண்மைப் பெயரல்ல) என்பவரை-அண்மையில் அவர் மேற்கொண்டிருந்த ஓர் இரகசியப் பயணத்தின்போது டில்லியில் சந்தித்தோம்.

''அதிகாரங்களை ஜெயவர்த்தனா ஒருபோதும் தமிழர்களுக்கு வழங்கமாட்டார்'' என்று உறுதியாகக் கூறினார் தினேஷ். அவர் சொன்னார் :- ''பாராளுமன்றம் அண்மையில் செய்த அரசியல் அமைப்பின் மீதான 13-வது திருத்தம், தமது எல்லைக்கு உட்பட்ட நிலப்பகுதிகளின் முன்னேற்றத்துக்கு எந்த நிதியையும்ஒதுக்கும் அதிகாரத்தை மாகாணசபைகளுக்கு இல்லாமல் செய்துவிடுகிறது. கொழும்பிலேயே மாகாணசபைகள் தங்கியிருக்க வேண்டும். அப்படியானால் இந்த மாகாணசபைகளை விட சிறீலங்காவில் உள்ள மாநகர சபைகள் (Municipalities) மேல் என்றுதான் பொருள்.

''தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க நினைப்பதன் மூலம் தமிழர்களுக்குள்ள ஒரே பாதுகாப்பையும் இந்தியா அழிக்க நினைக்கிறது'' என்று தினேஷ் கூறினார். ''சிங்களப் படை-மொசாட்படை - பாகிஸ்தான் படை - பிரிட்டிஷ் - தென் ஆபிரிக்க கூலிப்படைகள் அனைத்தின் கொடுமைகளில் இருந்தும் புலிகள்தான் தமிழர்களைக் காப்பாற்றினார்கள். அத்தனை படைகளாலுமே விடுதலைப் புலிகளை அழிக்க முடியாமல் போயிற்று. என்ன காரணம்? தமிழீழ மக்கள் உறுதியாக எங்களோடு இருப்பதுதான். இந்த நிலை இருக்கும்வரை எங்களை யாரும் அழிக்க நினைக்கலாம். ஆனால் அழிக்க முடியாது என்று அவர் கூறினார்.

THE WEEK
June 5—11, 1988

'இன்று இந்திய அமைதிப் படையை மோதி வெல்லும் ஆற்றல் விடுதலைப் புலிகளிடம் இல்லை' என்று லெப். ஜெனரல் கல்கட் அடித்துச் சொல்கிறார். உண்மைதான். ஆனால் இந்தியர்கள் நினைப்பதுபோல் அத்தனை 'மோசமான' நிலையில் விடுதலைப் புலிகள் இல்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்.

மட்டக்களப்பில் பெரிய எண்ணிக்கையில் இந்தியப் படை (சிறீலங்காவில் உள்ள 51,356 இந்திய வீரர்களில் 10,000 பேர் மட்டக்களப்பில் இருக்கிறார்கள்) இருக்கும்வரை நேரடி மோதல்கள் நிகழ்வதற்கில்லை. இருப்பினும் அவர்களின் கண்ணி வெடிகளையும் - குண்டு வெடிகளையும் இந்திய அமைதிப்படையால் தடுத்து நிறுத்த முடியாது.

மட்டக்களப்பின் மக்கள் குழுத் தலைவர் வண. பிதா. சந்திரா பெர்னாண்டோ அவர்கள் இப்படிச் சொல்கிறார் :- ''இந்திய அமைதிப்படை இருப்பதை மக்களில் சிலர் இன்று

www.tamilarangam.net



பொறுமையோடு தாங்கிக் கொண்டாலும் தங்கள் தாய் மண்ணில் இரண்டாம் தரத்துக் குத் தாங்கள் தள்ளப்பட்டு விட்டதாகவே அவர்கள் உணர் கிறார்கள்.''

ஓர் ஓய்வுபெற்ற அரசு ஊழி யர் சொன்னார் :- ''பிரிட்டிஷ் காரர்கள் எங்களுக்கு நிறைய நன்மைகள் செய்தார்கள். நாங்கள் அவர்களைப்பார்த்துப் 'போய்விடுங்கள்' என்று சொல் லாமல் விட்டோமா? என்ன? உரிய வேளை வரும்போது இந்தியப் படைகளைப் பார்த் தும் நாங்கள் அதையேதான் சொல்லப்போகிறோம்.''

ANITA PRATAP
INDIA TODAY
June 15, 1988

அண்மையில் கொழும்புக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் மேற்கொண்ட பயணமும்-சிறீலங்கா அரசுடன் அவர் நடத்திய பேச்சுவார்த் தைகளும் தமிழரின் இன்றைய பிரச்சனைக்கு எந்தத் தீர்வை யும் கண்டிருப்பதாகத் தெரிய வில்லை. புதுடில்லி தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண விரும்பவில்லை. இராணு வத் தீர்வு ஒன்றையே சாதிக்க அது துடிக்கிறது என்பதைத் தான் இப்பயணம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இது உண்மையானால் விளைவுகள் ஆபத்தானவையாகவே இருக் கும். வடகிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளின் ஒரு பெரிய முகாமை வளைத்துக் கொண்டு இந்திய அமைதிப் படை அவர்கள் சரணடைய வேண்டும் என எதிர்ப்பார்க் கிறது. இல்லையென்றால் விடுதலைப் புலிகளை முற்றாக கொன்று அழித்து விடுவது என்று இந்தியப் படையினர் முடிவு செய்திருக்கிறார்கள். இப்படி நினைப்பது இராணுவ நெஞ்சங்களின் கோளாறாகும். தமிழீழப் போர் என்பது மக்கள் பேராதரவு கொண்ட தென்பதையும்—ஒரு சில நூறு போராளிகளை அழிப்பதால் இப்படிப்பட்ட ஓர் இயக்கத்தை அழிக்க முடியாது என்பதையும் இந்திய அரசு மறந்துவிட்டது. ஒரு போராளிகள் அணி அழிக் கப்பட்டால்-அடுத்த போராளி கள் அணி உருவாகிவிடுகிறது என்பதையே அனுபவம் நமக்குக் காட்டுகிறது.


THE INDIAN POST
June 2, 1988

கடந்த சில மாதங்களாக தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்பும் பணியினை இந்திய அரசு முடுக்கி விட்டுள்ளது. இருப்பினும் ஒரு இலட்சம் அகதிகளில் 15,000 பேர் மட் டுமே நாடு திரும்பியுள்ளனர்.

நிகழும் கல்வி ஆண்டில் இலங்கைப் பிள்ளைகள் இந்தி யாவில் படிக்க முடியாது என்று இந்தியா சில 'அழுத்தங்களை' ஏற்படுத்தியும்கூட அகதிகள் சிறீலங்கா திரும்புவதாய் இல்லை.

'தமிழீழ விடுதலைப் புலி களோடு' இந்தியா தனக்குள்ள பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளும் வரை இம்மக்கள் தங்கள் தாயகம் திரும்ப விரும்ப வில்லை.

DECCAN HERALD
June 3 - 1988




நன்றி — சாவி

www.tamilarangam.net

# இந்தியத் துப்பாக்கிகளுக்கு நடுவில் மறைந்த புலிகளுக்கு மக்கள் அஞ்சலி!

வடமராட்சியில் அந்த விடுதலைப் புலி மக்கள் நெஞ்சங்களில் என்றும் வாழ்கிறவன். சிங்களப்படை வடமராட்சியை முற்றுகை யிட்டு - மக்களைக் கொன்று குவித்தபோது அவன் நிகழ்த்திய வீரப்போரை மக்கள் என் றைக்கும் மறக்கமாட்டார்கள். அவன்தான் சலாம். இந்திய வெறிப்படையினர் சலாமை ஜூன் 2-ஆம் தேதி சுட்டுக்கொன்றார்கள். ஒரு மாவீரன் வீழ்த்தப்பட்டான்.

துயரத்தில் மக்கள் தோய்ந்தார்கள்.

வடமராட்சி முழுவதும் கதவடைப்பு. பனைகளெல்லாம் புலிக்கொடிகள். வீதிகளின் இருபுறமும் வாழைத் தோரணம்.

வயிறு எரியாதா ?

இந்தியப் படையின் 'ட்ரக்' வண்டிகள் உறுமிப் பாய்ந்தன. துப்பாக்கிகள் துள்ளிக் குதித்தன. இந்தியப் படை வெறியர்கள் சில இடங்களில் வாழைத் தோரணங்களை இடித்துத் தள்ளினார்கள்.

வழமையான வெறிக்கூத்து.

'விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டும் வரை நாங்கள் ஓயப்போவதில்லை. முழுத் தமிழர்களும் கொல்லப்பட்டால்கூட நாங்கள் கவலைப்பட மாட்டோம்!' என்று இந்திய 'பாரா'படை வீதி வீதியாக முழங்கிற்று.

பொதுமக்கள் கொஞ்சமும் பொருட்படுத்த வில்லை.

அச்சுவேலி - ஆவரங்கால் - புத்தூர் பகுதி யில் அண்மையில் நிகழ்ந்த விடுதலைப்புலிகள் பொறுப்பாளர் 'தாமு' என்று அழைக்கப்படும் கந்தன் ரத்தினத்தின் மறைவுக்கும் பெரிய அளவில் மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

தாமுவும் விடுதலைக்காகத் தன்னை அழித்துக்கொண்டவனே.

அச்சுவேலி - ஆவரங்கால் - புத்தூர் பகுதி யில் கடைகள் திறக்கப்படவில்லை. பள்ளிக் கூடங்கள் மூடிக்கிடந்தன. வீதிகளில் வாகனப் போக்குவரத்து நின்றது. எங்கும் கறுப்புக் கொடிகள். மக்களின் கண்ணீர் நெருப்பாய்ப் பொங்கிற்று.

ஆவரங்கால் சந்தியில் புலிக்கொடி மிடுக் கோடு பறப்பதை 'அமைதிப் படை'யினர் கண்டார்கள்.

துப்பாக்கிகளால் தமிழீழத்தை ஒடுக்க முடியுமா?

இப்போது அவர்களுக்குப் புரிகிறது..........

தமிழீழம் புலிகளோடுதான்.

## புலிக்கொடிகள்! கதவடைப்பு!
## பாரத அரசுக்கு புதியதோர் பாடம்!

www.tamilarangam.net

# இந்திய - இலங்கை உடன்படிக்கையின் இலட்சணம் - 1

□

ஆயுதங்களை எல்லோரிடமுந்தான் பறிக்கிறோம் என்று கூறிக்கொண்டு - அதே வேளை 'ஈ. பி. ஆர். எல். எப்.' 'டெலோ' 'திரீஸ்டார்' ஆகிய சமூக விரோதக் கும்பல்களின் கையில் ஆயுதங்களைத் தந்து - அவர்களைக் கொண்டே விடுதலைப் புலிகளை அழிக்கும் வேலையில் இன்று பாரதப் படை இறங்கியுள்ளது.

களம் ஆடும் விடுதலைப் புலிகளை மோதினால் பரவாயில்லை - பாவம்......அப்பாவிப் பொதுமக்களை அல்லவா 'கல்லறைக்கு' அனுப்பி 'அமைதி' காண்கிறார்கள் கொடியவர்கள்.

28-4-88 இல் புதுக்குடியிருப்பு காட்டுப்பாதையால் விடுதலைப் புலி எழில் என்பவரின் தாயும் தம்பியும் போய்க்கொண்டிருந்தபோது எதிரில் இந்தியப்படையின் 'ட்ரக்' வண்டியில் வந்த ஈ.பி.ஆர்.எல்.எப். ஆட்கள் - இந்தியப் படையின் கண்களுக்கு முன்னாலேயே எழிலின் தம்பியைச் சுட்டுப் பிணமாகப் போட்டிருக்கிறார்கள்.

வேறோர் இடத்தில் விடுதலைப் புலி கிறேசியின் தந்தை மீது இவர்கள் துப்பாக்கியால் சுட்டதில் அந்த மனிதர் உட்பட இருவர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஒன்று கேட்கிறோம்......

விடுதலைப் புலிகளிடம் மட்டும் ஆயுதங்கள் பறிக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்திய - சிறீலங்கா உடன்படிக்கையின் விதியா ?

சிறீலங்கா அரசு, பிரிட்டன், இசுரேல், பாகிஸ்தான் கூலிப் படைகளை அழைத்து தமிழர்களை அழித்தது. இந்திய அரசு தமிழர்களையே கூலிப்படை ஆக்கித் தமிழர்களை அழிக்கிறதே - இது கொடுமை இல்லையா ?

## இந்தியப்படை முகாமில் யாழ்ப்பாண ஆசிரியர்கள் சித்திரவதை.... மாணவர்கள் போராட்டம் !

கல்லூரிகளில்கூட இந்தியப்படை வெறிக்கூத்தாடத் தொடங்கி விட்டதாம்.

யாழ்ப்பாணத்தின் சிறந்த கல்லூரிகளில் ஒன்றான சென் ஜோன்ஸ் கல்லூரிக்குள் புகுந்த இந்தியப் படையினர் - கமலநாதன் அல்போன்ஸ் ஆகிய இரு ஆசிரியர்களைக் கைது செய்து - காங்கேசன்துறை இந்தியப்படை முகாமுக்கு அழைத்துச் சென்று - கொடுமையாக அங்கே வைத்து அவர்களைச் சித்திரவதை செய்திருக்கிறார்கள்.

ஆசிரியர் அல்போன்ஸ் பற்றிய தகவல் எதுவும் இல்லை என்றும் - கமலநாதன் ஆசிரியர் பலத்த காயங்களோடு யாழ்ப்பாண மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகிறது.

யாழ்குடாநாடு முழுவதும் இந்தியப் படையின் இக்கொடுமையைக் கண்டித்து 20-5-88 இல் மாணவர்கள் பாடசாலை பகிஷ்கரிப்பு நடத்தி இருக்கிறார்கள்.

''இந்தியப் படையின் வெறித்தனத்துக்கு எல்லையே இல்லை'' என்கிறார் ஒரு யாழ்ப்பாணத் தமிழர்.

www.tamilarangam.net



# செத்துக் கொண்டிருக்கிறாள்



வாழ்க்கையில் கொஞ்சம் வசதி குறைந்தவர்கள் இங்கேதான் படிக்க வருகிறார்கள். விவேகானந்தா மகளிர் வித்தியாலயத்தில் அட்டகாசங்கள் இல்லை. ஏழ்மையின் நொந்துபோன உள்ளங்களுக்குக் கிளுகிளுப்பு ஏது? பெரிய இடத்துப் பெண்களின் கூச்சலையும் பாய்ச்சலையும் இங்கே பார்க்க முடியாது. காற்று வீசி அலை கிளப்பாத நேரத்தில் மட்டக்களப்பு ஏரி எப்படி அமைதியாக இருக்குமோ - அப்படித்தான் அந்தப் பள்ளிக்கூடமும் இருந்தது.

யோகராணி புத்தகங்களோடு பள்ளிக்கூடத்தை விட்டுத் தெருவில் இறங்கினாள்.

நீண்ட தூரம் குனிந்த தலை நிமிராமலே நடந்தவள்......தூரத்தில் வந்த சிறீலங்காப் படையின் 'ட்றக்' வண்டியைப்பார்த்து பக்கத்தில் இருந்த வீட்டுக் 'கடப்பின்' உள்ளே 'விர்' என்று நுழைந்தாள். 'வா புள்ள' என்று அழைத்து ஒரு பெரியவர் அவளை முற்றத்தில் உட்காரவைத்தபோது யோகராணிக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது. ''ஆமிக்காறனுகள் வாறானுகள்'' என்று சுருக்கமாக அவள் சொன்னாள். 'ட்றக்' வண்டி உறுமிக் கொண்டே பெரியவரின் வீட்டைக் கடந்து போயிற்று.

சிங்களப்படை ஊர்களை வளைத்துக் கொண்டு தமிழ்ப் பெண்களைக் கற்பழிக்கும் கொடுமைகளை யோகராணி அறிந்திருந்தாள். இல்லையென்றால் முன்பின் தெரியாத பெரியவர் வீட்டுக்குள் திடுதிப்பென்று நுழைவாளா? 'திருகோணமலையிலயும் கனக்கப் பொடிச்சிகள பழுதாக்கிப் போட்டானுகளாம் அறுவானுகள்...' என்று யோகராணியின் அச்சத்தைப் புரிந்து கொண்ட கிழவர் ஆத்திரத்தோடு உறுமினார். யோகராணி வீட்டுக்குப் போக எழுந்ததும் 'கடப்பு' வரை வந்து ''கவனமாகப் போ புள்ள...சண்டாளனுகள் குறுக்காலயும் நெடுக்காலயும் திரியுறானுகள்'' என்று கூறி அக்கறையோடு அவளை வழியனுப்பி வைத்தார் அவர்.

யோகராணி இப்படித்தான் ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடம் போய் வருகிறாள். தமிழீழ மக்களின் இழிந்த அடிமைநிலை பத்தாம் வகுப்புப் படிக்கும் அவளை உலுப்பிற்று. பள்ளிக்கூடம் போகும் வழியில் எத்தனை வீடுகள் எரிந்து சாம்பலாகிக் கிடக்கின்றன. இதே தெருவில் பல குடும்பங்களைச் சேர்ந்த 'பொடியனுகள்' விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து தாய் மண்ணுக்காகப் போராடிப் பிணங்களாய் விழுந்ததை அவள் எண்ணிப் பார்த்தாள். எத்தனை பேர் 'பூசா' முகாமில் அடைபட்டு...

யோகராணியின் கண்களில் நீர் தளதள என்று நிரம்பிற்று. வீட்டுக்கு வந்ததும் புத்தகங்களை மேசையில் எறிந்து விட்டுத் தாயைப் பார்த்து அவள் சொன்னாள்: ''அம்மா ...இனி என்னால பள்ளிக்குப் போக ஏலாது...''

○

தமிழரின் நாற்பது ஆண்டு கால விடுதலைப் போரில் ஆரையம்பதி என்றைக்குமே பின்நின்றதில்லை. மட்டக்களப்பு நகரில் இருந்து ஐந்து கல் தொலைவில் இருக்கும் இக்கிராமம் 'அஹிம்சை' வழியில் தமிழர்கள் செல்வா தலைமையில் போராடிய காலத்திலும் சரி - சிங்கள இனவாதிகளுக்கும் அகிம்சைக்கும் தொடர்பே இல்லை என்பதைப் புரிந்து கொண்டு பிரபாகரன் அந்த வெறியர்களை எதிர்த்து துப்பாக்கிகளோடு போராடும் இன்றும் சரி; களத்திலேயே நிற்கிறது. மட்டக்களப்பில் இதுதான் பெரிய கிராமம். மீன் பாடும் மட்டுநகர் ஏரியோடு ஒட்டினாற்போல் ''ஆத்தங்கரையில்'' அமைந்த இக்கிராமம் அழகாகவே இருக்கும். மக்கள் தொகைப் பெருக்கத்தால் 'செல்வா நகர்' என்ற புதிய கிராமம் ஒன்றை இவ்வூர் மக்கள் ஆரையம்பதிக்குப் பக்கத்திலேயே உருவாக்கியிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செல்வா நகரில்தான் யோக ராணியின் வீடு. அவளுடைய குடும்பம் பெரியது. அப்பா செத்துப்போனார். ஏழு பேரைக் கவனிக்கவேண்டிய பொறுப்பு தாய்க்கு இருந்தது. மூத்தவர்கள் எதையோ உழைத்துவர வெளியே போய் வந்துகொண்டிருக்கிறார்கள். பத்தொன்பது வயது யோகராணி பள்ளிக் கூடத்தையும் படிப்பையும் உதறிவிட்டு வீட்டில்தான் கிடக்கிறாள். பொழுது போவதே இல்லை. அடிக்கடி சிங்களப் படை வெறியர்கள் ஆரையம்பதியை வளைத்துக்கொள்வார்கள். அந்தக் கிராமத்தில் துப்பாக்கிகளின் வேட்டோசை கேட்டுக்கொண்டே இருந்தது. ''புலிப் பொடியனுகளுல ஒருவனைச் சுட்டு - சவத்த சிங்கள 'ஆமி'க்காறனுகள் கட்டி இழுத்துற்றுப் போறானுகளாம்...'' யாரோ 'ஓ' என்று அழும் ஓசை கேட்கும். அச்சமும் நடுக்கமுமாய்......

○

1987 ஜூலை 29-இல் இந்திய சிறீலங்கா உடன்படிக்கை ஏற்பட்டபோது வேகமாக ஓடிய ஒரு வண்டி திடீரென்று நின்றுவிட்டது போலவே தோன்றிற்று.

ஆரையம்பதி - செல்வா நகர் மக்கள் அசைந்து போனார்கள். யாருக்காக யார் உடன்படிக்கை செய்வது? அரசியல் தெளிவு மிக்க அம்மக்கள் உடன்படிக்கையில் எதுவுமே இல்லை என்பதை உறுதியாகவே தெரிந்துகொண்டார்கள். பிரபாகரனின் சுதுமலைப் பேச்சு அவர்களை உணர்ச்சிவசப் படுத்தியது - அதே வேளை விழிப்பாக இருக்கவும் செய்தது.

ஊரில் காந்தி காலக் கதை தெரிந்த ஓரிரு கிழவர்கள் இந்தியப் படை வந்ததில் நம்பிக்கை பெற்றார்கள் என்பதும் உண்மை. ''எப்படியோ இனிமேல் சிங்கள 'ஆமி'க்காறனுகளுற 'அட்டாதுட்டித்தனங்கள்' நடக்காது தம்பி'' என்று பேரனைப் பார்த்துப் பெருமையோடு சொல்லிக்கொண்டார் ஒரு கிழவர்.

தெருக்களில் இந்தியப் படையின் கரும்பச்சை 'ட்றக்' வண்டிகள் பறக்கத் தொடங்கின......

○

கண்ணகி பிறந்த சோழநாட்டிலும் - வழக்குரைத்த பாண்டிய நிலத்திலும் - மறைந்த சேர மண்ணிலும் கண்ணகி கோயில்களைக் காண்பது அரிதாக இருந்தாலும் மட்டக்களப்பில் கண்ணகி கோயில்கள் இல்லாத கிராமங்களே இல்லை. தமிழீழத்தின் இந்தத் தென் பகுதியில்தான் இன்று கண்ணகி வழிபாடே உயிரோடு வாழ்கிறது. ஒரு 'மனிதப் பெண்ணை' - அவள் கற்பின் மாண்பை மட்டக்களப்பு மக்கள் போற்றி வழிபடுகிறார்கள். ஒவ்வொரு வைகாசித் திங்களிலும் கண்ணகி திருவிழா தடபுடலாக நடந்து 'குளுத்திச் சடங்கோடு' நிறைவு பெறுகிறது.

ஆரையம்பதியிலும் 'கண்ணகை கோயில்' உண்டு. சிறிய கோயில்தான்-ஆனால் கோயில் எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். பெண்களுக்குக் குறைவில்லை. கோயிலின் மணல் முற்றத்தில் பிள்ளைகளின் விளையாட்டு ஒரு பக்கம் நடக்கும். அங்கும் இங்குமாக நான்கு பெரியவர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள்.

யோகராணி கண்ணகி கோயிலுக்குள் நுழைந்தபோதே தன்னை மறந்தவளாய்த்தான் நுழைந்தாள்.

'அம்மாளே! இவ்வளவு நாளும் எங்கட ஊருல ஒரு பெண்ணுக்கும் தீங்கு வராம காப்பாத்துனியே... உன்னை ஒரு நாளும் மறக்கமாட்டம் தாயே......இனி எங்களுக்கு ஒரு கேடும் வராது... இந்தியப்படை வந்திருக்குது.'

யோகராணியின் கண்களில் நீர் கசிந்து 'பொலபொல' என்று கொட்டிற்று.

அவள் அழுதாள்.

○

ஆத்தங்கரையில் நண்டு வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போக வந்த மூன்றாம்குறிச்சி வாத்தியார் தெருவில் நின்று உரத்த குரலில் சொன்னார்:- ''விடுதலைப் புலிகளுற 'நிதர்சனம்' நிலையத்தையும் - ஈழமுரசு முரசொலி பத்திரிகைக் கட்டிடத்தையும் இந்தியப் படை யாழ்ப்பாணத்துல குண்டு வச்சித் தகர்த்துப் போட்டுதாம்...விடுதலைப் புலிகள் திருப்பி அடிக்கத் தொடங்கிற்றானுகளாம்...... எத்தனை நாளைக்குத்தான் பொடியனுகளும் பொறுப்பானுகள்? அவன் பொடியன் திலீபனையும் - அவன் குமரப்பாவையும் - அவன் புலந்தியையும் - மத்தப் பொடியனுகளையும் இவனுகள் தானே சாகவச்சவனுகள்......''

வாத்தியார் பேசிக்கொண்டிருந்தபோதே இந்திய 'ட்ரக்' வண்டி ஒன்று தெருவால் சீறிக்கொண்டு போயிற்று. தெருவில் நின்றவர்கள் எல்லோருமே அந்த வண்டியின் வழக்கத்துக்கு மாறான வேகத்தைக் கவனிக்கத் தவறவில்லை. பழையபடி அவர்கள் நெஞ்சில் அச்சம் தலைதூக்கிற்று.

வாத்தியார் தொடர்ந்தும் பேசிக்கொண்டுதான் இருந்தார்........''திருகோணமலைப் பகுதியில சிங்களவனுகள ஆயிரக்கணக்கில் குடியேத்துறானுகளாம். இதுக்குத்தானா உடன்படிக்கை?''

'ட்றக்' வண்டி சுற்றிக்கொண்டு திரும்பவும் அதே

இடத்தில் வந்து நின்றது. வண்டியில் இருந்த முரட்டு இந்தியப்படை வெறியன் ஒருவன் 'அரைகுறைத்' தமிழில் கத்தினான். 'டேய்...றோட்டுல நில்லாதிங்கடா...நீ எல்லாம் புலிகள்தானே...''

எல்லோரும் சிதறிக் கலைந்து போகத் தொடங்கினார்கள்.

வாத்தியாரும்தான்.

ஆனால் அவர் போகும் போதும் - பேசிக்கொண்டே போனார். ''நாம அடிமைகளா இருக்குமட்டும் நாலு பேரும் உதைப்பானுகள் தான். நம்மள நாமளே ஆளவேணும். அதுமட்டும் நமக்கு உதைதான்...வெடிதான்...சாவுதான்.''

○

*1987* அக்டோபர் 9-ஆம் நாள் தொடங்கிய இந்தியப் படை - விடுதலைப் புலிகள் சண்டை நாளுக்கு நாள் பெரிதாயிற்று. ஓர் எதிரி நாட்டு அரசுப் படையை மோதுவது போலவே விடுதலைப் புலிகளை இந்தியப் படைகள் மோதின. விடுதலைப் புலிகள் தளர்ந்துவிட வில்லை. உலகின் அந்த நாலாவது பெரிய அரசின் படைகளை எதிர்த்து அவர்கள் உறுதியாகவே போராடினார்கள்.

''கல்லடியில வீடு வீடா சோதனை போடுறானுகளாம். நாளைக்குச் செல்வா நகருக்கு வந்தாலும் வருவானுகளாக்கும்...'' தெருவில் சேதி அடிபட்டது.

யோகராணி இடிந்து போனாள். அவள் நெஞ்சு படபடத்தது.

வீட்டு முற்றத்தில் உட்கார்ந்து தாயும் பிள்ளைகளும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

எங்கோ தொலைவில் யாரோ ஒருவன் 'தண்ணியில்' வாய் கிழியக் கூத்துப் பாட்டுப் பாடுவது கேட்டது. இரவு மாடுகள் வேலியில் உராய்ந்துகொண்டு போயின. வீதியில் எரிந்த மின் விளக்கு வெளிச்சம் வேலிச் செடிகளைத் தாண்டிப் பொட்டுப் பொட்டாக முற்றத்தில் விழுந்துகொண்டிருந்தது. தூரத்தில் அடிக்கடி துப்பாக்கி வேட்டோசைகளும் கேட்டன.

'அமைதி'யின் உடல் துண்டு துண்டாய்க் கிழிந்து கிடந்த அந்த இரவில் ஒரு பிணத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்து பேசுவது போலவே அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''ட்றக்'குல போற நேரத்துல நல்லாச் சிரிக்கிறதும் - கையைக் காட்டுறதுமாகத்தானே திரிஞ்சவனுகள் - இவனுகள் இந்தமாதிரி இருப்பானுகள் எண்டு நாம நினைக்கல்லியே... 'சத்துருக் கொண்டானு'ல பொம்புளையள எல்லாம் கெடுத்துப் போட்டானுகளாம்...''

பக்கத்து வீட்டுப் பிள்ளை சொன்ன சேதியை யோகராணி சொன்னாள்.

''ஏனம்மா சிங்களவனுகளுற 'ஆமி'யும் இந்தியாட 'ஆமியும்' ஒண்டுதானா?''என்று தாயைப் பார்த்துக் கேட்டாள் சின்னவள்.

தாய் போராட்ட உணர்வோடும் - அதேவேளை பெருமூச்சோடும் கூறினாள்: 'எனக்கெண்டாத் தெரியா மனே... பாவம்...இவனுகள் விடுதலைப் புலிகளை அழிக்கிற எண்டா எவளவு மனவருத்தமா இரிக்குது. நமக்காகத்தானே அவனுகள் செத்தவனுகள். 'இயக்கமோ' என்னவோ எண்டு சொல்லித்து ஆரோ நம்மடவனுகள்தான் காட்டிக் கொடுக்கானுகளாம். சனமெல்லாம் சொல்லுது.''

அவர்கள் இரவு முழுதும் பேசிக்கொண்டே இருந்தார்கள். ஒரு வெளவால் மாமரத்தில் மோதிக்கொண்டு பறந்து போயிற்று.

○

நவம்பர் 23 காலை அந்த வீட்டில் எல்லோரும் சோர்வுடனேயே இருந்தார்கள். இரவு தூங்காமல் யோகராணியின் முகம் காய்ந்துபோய் இருந்தது.



www.tamilarangam.net



வழக்கமான காலை வேலைகளை முடித்துவிட்டு அவள் அம்மாவுக்குக் 'கோப்பி' போட்டுக் கொடுத்தாள். அம்மாவும் மற்றவர்களும் வேலைக்குப் புறப்பட்டார்கள்.

யோகராணி கொஞ்ச நேரம் முற்றத்துக்கு வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தபடியே அசைவற்று நின்றாள். பெரியவர்கள் யாருமே வீட்டில் இல்லைஎன்பதை நினைக்க அவளுக்கு நடுக்கமாக இருந்தது.

இருவர்தான் அவளோடு வீட்டில் இருந்தார்கள். ஒருத்தி சின்னத்தங்கச்சி. இன்னொன்று அவளுடைய நாலு வயதுக் குஞ்சு மருமகள். இவர்கள் ஒரு துணையா? பாதுகாப்பா?

கிணற்றடிக்குப் போய்க் குளித்துவிட்டு வந்து தலை வாரிக்கொண்டிருந்தவள் -தெருவில் யாரோ ஒரு சிறுவன் 'இந்தியப்படை வருகுதாம்' என்று கத்திக்கொண்டு ஓடிய போது அசைந்து போனாள்.

வெளியே தெருவில் ஆட்கள் வேகம் வேகமாக நடப்பதும் ஓடுவதும் தெரிந்தது.

மோட்டார் சைக்கிள் வண்டியில் போன ஒருவன், ''முதலாம் குறிச்சிச் சந்தியில 'லொறி' களை எல்லாம் கொணர்ந்து உட்டுத்து இந்தியாக்காற 'ஆமி' நிக்குதாம்... ஊருக்குள்ள வாறானுகள்போலக் கிடக்கு..'' என்று உரத்துச் சொல்லிக் கொண்டே வண்டியை விரைவாக ஓட்டினான்.

யோகராணிக்கு உடல் வெகாதித்தது. அவள் படபடத்தாள். வியர்வை வியர்வையாய்க் கொட்டிற்று.

ஊரில் ஒரு பெரிய அமைதி நிலவுவதை அவள் கவனித்தாள். மாலையில் பறவைகளெல்லாம் ஓடி அடங்குமே - அப்படித்தான் செல்வா நகர் ஓடி அடங்கி ஒய்ந்து கிடந்தது.

யோகராணி என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டுக்குள்ளேயே இங்கும் அங்குமாக நடந்துகொண்டிருந்தாள்.

அப்போது நேரம் 10 மணி.

நாய்கள் தொடர்ந்து குலைக்கும் ஓசை தூரத்தில் கேட்டது. அந்த ஓசை ஒவ்வொரு நொடிப் பொழுதும் பக்கத்தில் நெருங்கி வருவதை அவள் கேட்டாள். இப்போது அவளுடைய தெருவிலேயே நாய்கள் குலைக்கத் தொடங்கிவிட்டன.

யோகராணி வேலிப்பக்கம் பார்வையைச் செலுத்தினாள்... இந்தியப்படை வெறியர்கள் இருவர் வேலிப்'படலை'யைத் திறந்து அவள் வீட்டைநோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.

பக்கத்தில் வந்ததும் ஒரு முரடன் அவளை விழுங்கிவிடுவது போலவே பார்த்தான். யோகராணி ஒடுங்கிப் போனாள்.

வெறித்தனமான அவன் கண்களும் - காவி படிந்த அந்த அசிங்கமான பற்களின் முரட்டுச் சிரிப்பும் - அவள் நெஞ்சைக் குத்தி வதைத்தன.

''வீட்டில ஆம்பிளைகள் யாரும் இல்ல...'' என்று கள்ளம் கபடமில்லாத அவள் அந்த முரட்டு இந்தியப்படை வெறியர்களைப் பார்த்துச் சொன்னாள். விடுதலைப் புலிகளைத் தானே தேடுகிறார்கள்...இப்படிச் சொன்னால் அவர்கள் போய்விடக்கூடும் என்பது அவள் நினைப்பு.

ஆனால்......

வெறியர்கள் அவளை விலங்குத்தனமாக நெருங்கினார்கள்.

யோகராணியின் கையைப் பற்றி ஒருவன் இழுத்தபோது 'அக்கா!' என்று கத்திய சின்னத் தங்கச்சியை அடுத்தவன் 'கொற கொற' என்று இழுத்துக் கொண்டு போனான்.

யோகராணி நடுங்கினாள்.

அவளைக் கீழே தள்ளி அவளுடைய மார்புச் சட்டையைக் கிழித்தான் அந்த நெட்டை வெறியன். வானம் தலை கீழாகிக் கொண்டிருந்தது. அவளுடைய இரண்டு கால்களையும் முரட்டுக் கைகளால் வெறித்தனமாகத் தள்ளி......

'கண்ணகி அம்மாளே!' என்று ஓங்கிக் கத்தினாள் யோகராணி.

அவள் நினைவாற்றல் கொஞ்சம் கொஞ்சமாய் மங்கிப் போயிற்று.

ஒருவன் அவளை விட்டு நிமிர்கிறான். அடுத்தவன் தொடர்ந்து......

○

கண்களைத் திறந்தபோது யோகராணி ஒரு சிறிய மருத்துவ நிலையத்தில் இருந்தாள். மருத்துவர்கள் அவள் உடலைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

''கொல்லாம இந்த அளவோட உட்டுத்துப் போனானுகளே - 'பொடிச்சி'ர நல்ல காலந்தான்...' என்று மருத்துவ நிலையத்துக்கு வெளியே ஒரு கிழவி பெருமூச்சோடு சொல்லிக்கொண்டாள்.

கட்டிலில் கிடந்த யோகராணியின் கண்களில் நீர் பொங்கிற்று.

நினைவு வரும்போதெல்லாம் உயிருள்ளவரை இனி அவள் செத்துச் செத்துத்தானே......

கட்டிலுக்குப் பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்து அச்சத்தோடு ''சண்டாளனுகள் ஊரை விட்டுப் பொயிற்றானுகளா?'' என்று கேட்டாள் அவள்.

ஒரு பெரியவர் சொன்னார் :- ''நான் வரக்குள்ள கண்ணகி கோயிலடியில 'ட்றக்' வண்டி நிக்குது. அம்மாளைக் கும்பிடுறானுகள் போல கிடக்கு.''

★

www.tamilarangam.net

# இந்திய - இலங்கை
# உடன்படிக்கையின் இலட்சணம் - 2

☐

சிறீலங்காப் படைகள் தமிழீழத்தில் இராணுவ நடவடிக்கைகளை முற்றாக நிறுத்தும் என்பதும் - முகாங்களுக்குள் அவை அடங்கி இருக்கும் என்பதும் இந்திய - இலங்கை உடன்படிக்கையின்போது ஒப்புக்கொள்ளப்பட்ட நிலைப்பாடுகள்.

ஆனால்......

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாவற்குளம் என்னும் தமிழ்க் கிராமத்தில் சிறீலங்காவின் வெறிப்படை அண்மையில் தமிழர்களைக் கற்பழித்தும் - கொன்றும் வெறிக்கூத்தாடியிருக்கிறது.

இக்கிராம மக்கள் பலர் உடன்படிக்கைக்கு முன்பே சிங்களப் படையினால் கொடுமையாகக் கொல்லப்பட்டவர்கள். உடன்படிக்கையின் பின்பும் இந்த அப்பாவி மக்களுக்கு அதே கதிதானா?


பாரத - சிறீலங்கா உடன்படிக்கை இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கும் பாதுகாப்பா இது?

25-5-88 இல் ஓர் இளம் தம்பதியினர் சிங்களப் படையால் கடத்திச் செல்லப்பட்டு - பாவற்குளம் வீதியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

28-5-88 இல் இந்த கிராமத்தைச் சேர்ந்த 5 இளம் பெண்களை சிறீலங்கா வெறியர்கள் கடத்திச் சென்றிருக்கிறார்கள். அந்த இளம் உயிர்கள் வீடு திரும்பவில்லையாம்.

இந்திய அமைதிப்படையிடம் பாவற்குளம் மக்கள் முறையிட்டும் - இந்திய அமைதிப் படை 'அமைதியாகவே இருந்திருக்கிறது.

'விடுதலைப் புலிகளின் போரின்' நியாயம் இப்போது புரிகிறது அல்லவா?



www.tamilarangam.net

# இந்தியப்படை முகத்தில் கரிப்பூச்சு !

மட்டக்களப்பில் கடலோரக் கலங்கரை விளக்கத்துக்குப் பக்கத்தில் இந்தியப் படையின் 'கப்வாலிஸ் படைப்பிரிவு' முகாமிட்டிருக்கிறது.

இப்படைப் பிரிவு துவக்கப் பட்டு 17-வது ஆண்டு நிறைவு விழாவை 'லைட் ஹவுஸ் காம்பில்' 30-5-88-ல் தடபுடலாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விழா விருந்தில் கலந்து கொள்ள மட்டக்களப்பு பொது மக்களுக்கு இந்தியப் படையினர் அழைப்பு விடுத்தார்கள்.

இந்தியப்படை கொடுத்த ஆங்கில அழைப்பிதழையும் - துண்டறிக்கை மூலம் மட்டக்களப்பு மக்கள் இந்தியப்படைக்குக் கொடுத்த பதிலடியையும் கீழே தருகிறோம்.

**இந்தியப்படையின் அழைப்பிதழ்**

May we request you
Come and join us
In this memorable day
To relish the pleasure of togetherness
In an air of amity and brother-hood
When the GAPHWALIS complete,
Seventeen Years of glorious
- Selfless, dedicated service
- to the Nation and humanity.
We will be honoured
- to have you amidst us
for the function
at 12 AM on 30 May 88
at Light House Camp.
Thanking You.

**IPKF**

www.tamilarangam.net

மட்டக்களப்புத் தமிழர் பதில் அறிக்கை

# பொறியில் விழமாட்டோம்!

இரக்கமற்ற இ_ந்தியப் பட்டாளமே .
மிருகத்தனமாக உம்மால் கற்பிழந்த பெண்களின்
கண்ணீர் இன்றும் ஊற்றெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. தாங்க
ஒண்ணாத அவர்கள் அழுகை ஒலி எங்கள்
காதுகளில் என்றும் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது!
எங்கள் வீடுகளை எரித்தீர்கள்! அதனால்
ஓங்கி எழுந்த தீச்சுடர்கள் எமது கண்ணைவிட்டு இன்னும் அகலவேயில்லை!
அப்பாவித் தமிழர்களை உயிரோடு எரித்தீரே!
எப்போதும் எம் இதயம் இதை எண்ணிக்குமுறுகிறது!
எம்மினத்தின் விடுதலைக்காய் வீரமுடன் போராடி
தம்முயிரைக் கொடுக்க வந்த புலிகளைக் கொன்றீர்கள்!
நம்பியிருந்தோம்! நடுத்தெருவில் விட்டீர்கள்!
இத்தனையும் செய்தீர்கள்! விட்டீரா? தமிழர்
சொத்துக்களை மூன்று நட்சத்திர நாய்கள் கொள்ளையடிக்க
ஒத்துழைப்புக் கொடுத்தீர்! என்னே பெருமை!
பாவிகளே எம்மினத்தை உம்முடைய நாட்டின்
தேவைக்காய் அழிக்கும் சண்டாளர்களே!
இன்று விழா வைத்துக் கொண்டாடுகிறீர்!
நன்று! ஆனால் வெட்கமில்லாமல் எம்மையும் ஏன் அழைத்தீர்?
நீங்கள் தருகின்ற மருந்து வகைகள் ஒருக்காலும்
உங்களால் எம்மிதயத்தில் ஏற்பட்ட புண்ணை ஆற்றாது!
நீங்கள் கொடுக்கும் உணவு வகைகள்
எங்கள் சுதந்திர தாகத்தை ஒருநாளும் தணிக்காது!
விழாவுக்காய் நீங்கள் போடும் பந்தல்தனை, எம்மை
விழவைத்துக் கொல்லும் பொறியாகத்தான் நாம் நினைப்பேன்
தன்மானமுள்ள தமிழன் எவனேனும்
உன் விழாவில் கலக்கவே மாட்டான்!

தன்[illegible] தமிழன்

www.tamilarangam.net


ஒரு

# புனித இரத்தத்துக்கு அஞ்சலி !

□

"மக்களில் பலர் இந்திய அமைதிப்படையை இன்று 'சகித்துக்'கொண்டாலும் - சொந்தத் தாய்மண்ணிலேயே இந்தியப் படைகளால் தாங்கள் இரண்டாவது தர குடிமக்கள் ஆக்கப்பட்டுவிட்டதாக அவர்கள் நெஞ்சம் எரிந்துகொண்டிருக்கிறது. உதவி நடவடிக்கைகள் சிலவற்றால் மக்களைக் கவர்வதில் இந்தியப் படை ஓரளவு வென்றிருப்பது உண்மையே. ஆனால் மக்கள் அவர்கள் மீது இன்று காட்டும் அன்பு நிலையானது அல்ல.''

கிருத்துவ மத அருட்தந்தை வண. சந்திரா பெர்னாண்டோ அடிகளார் 1988 ஜூன் 15 'இந்தியா டுடே' (INDIA TODAY) இதழுக்குக் கொடுத்த பேட்டியில் இவ்வாறு கூறியிருந்தார். இந்த ஏடு ஜூன் 1-ஆம் தேதி வெளிவந்தது. பேட்டி வெளியாகி ஒரு வாரத்துக்கு உள்ளாகவே ஜூன் 6-இல் மட்டக்களப்பு மேரிமாதா கோயில் பக்கத்தில் அருட்தந்தை சந்திரா அடிகள் கொடுமையாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.



'டெலோ' அமைப்புத்தான் இக்கொலையைச் செய்தது என்றும் - இந்திய அரசின் உளவுப்படை 'றோ' (RAW) தான் 'டெலோ' ஆட்களை ஏவிவிட்டு அருட்தந்தை அவர்களின் புனித இரத்தத்தில் குளித்தது என்றும் ஏடுகள் சேதி வெளியிட்டுள்ளன.

சிங்கள சிறீலங்காப் படை தமிழீழ மக்களைப் பிணங்களாக அடுக்கிய காலத்தில் - பிள்ளைகளை இழந்த பெற்றோர் - பெற்றோரை இழந்த குழந்தைகள் - அனைவருக்கும் உறுதுணையாக இருந்து - அவர்களின் கண்ணீர் துடைத்தவர் அருட்தந்தை.

அமைதியான முகம் - உதடுகளில் இருந்து மெதுவாக எழும் சொற்கள் - மனச்சாட்சிக்காக நெருப்பில் நிற்கும் உறுதி - கொடுமையான உலகை எண்ணி மூக்கின் மேல் எழும் நெற்றிச் சுழிப்பு - மக்களுக்கு நடுவில்தான் அவர் இருந்தார்.

47 வயதில் அவர் பணி மிகப் பெரியது. கிருத்துவ மக்கள் மட்டுமல்ல - எல்லா மதங்களைச் சேர்ந்தவர்களும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவரை அருட்தந்தை என்றே ஏற்றுக்கொண்டார்கள்.

இந்தியப் படையின் கொடுமைகள் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ அடிகளைப் பெரிதும் துன்புறுத்தின. அதனால்தான் "மக்களில் சிலர் இன்று இந்தியப்படை மீது காட்டும் அன்பு நிலையானதல்ல" என்று 'இந்தியா டுடே' இதழில் அவர் கருத்து வெளியிட்டார். மட்டக்களப்பு மக்கள் குழுத் தலைவர் என்ற முறையில் ஒளிவு மறைவின்றி இதைச் சொல்ல அவருக்கு உரிமையுண்டு.

நெஞ்சில் பட்டதையே அவர் சொன்னார்.

பாவிகள் ஒரு நல்ல வழிகாட்டியை - மக்களின் அந்த இனிய உறுதுணையைப் பலிகொண்டு விட்டார்கள்.

மனித நெஞ்சமே இல்லாத இந்தக் கொடியவர்கள் எந்தக் காலத்திலும் மன்னிக்கப்பட முடியாதவர்களே.

கடைகளை மூடி - கறுப்புக் கொடிகளை ஏற்றி - மட்டக்களப்பு நகரம் அருட்தந்தை அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்திற்று.

தமிழ்ஈழம் துன்பத்தில் மூழ்கியது.


அருட்தந்தை அவர்களை யார்தான் மறப்பார்கள்?

மார்ட்டின் லூதர் கிங் அவர்களை மறக்க முடிந்தால் அருட்தந்தை வண. சந்திரா பெர்னாண்டோ அடிகளையும் மறக்கலாம்.

★

"ஒரு சுதந்திரமான, இறைமையுடைய தனியரசை அமைப்பதன் மூலமே தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்படும். சுதந்திர தமிழீழமே எமது அசைக்கமுடியாத அரசியல் இலட்சியம். எமது தாயகத்தை மீட்டு சுதந்திரத் தமிழரசைப் பிரகடனப்படுத்தும் வரை நாம் தொடர்ந்து போராடியே தீருவோம்."

வே. பிரபாகரன்



"தமிழீழம்" பற்றிய உங்கள் கருத்துக்கள், விமர்சனங்கள் [illegible]ங்கள் என்பவற்றை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**"தமிழீழம்"**

த. பெ. எண் : 928

அடையாறு, சென்னை - 20.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of TAMIL EELAM

# எம்மக்களே உண்மையை உணர்ந்துகொள்ளுங்கள் !

## அன்பார்ந்த தமிழீழ மக்களே !

அர்ப்பணிப்புகள் நிறைந்த, உணர்வு பூர்வமான தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை மிகவும் கேவலமான முறையில் கொச்சைப்படுத்தி, தமிழீழ மக்கள் மீது அர்த்தமற்ற, அநியாயமான கோரயுத்தத்தைத் தொடுத்து, ஆக்கிரமிப்புத் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இந்திய அரசானது, இந்தத் துரோகத்தனமான யுத்தத்தை நியாயப்படுத்தவும், இவ்வளவு அழிவுகளுக்குப் பின்னரும் சிறிதும் தளர்வடைந்து விடாது, இலட்சியப் பயணத்தில் உறுதியாக இருக்கும் எம்மக்களிடையே குழப்பத்தையும், விரக்தியையும் ஏற்படுத்தவும், பல்வேறு வழிகளிலும் திட்டமிட்ட ரீதியில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

ஜனநாயகத்தின் காவலன் என்று கூறிக்கொண்டு, தமிழீழ மக்களின் உண்மைக் கருத்துக்களின் வெளிப்பாடாக விளங்கிய பத்திரிகைகள் உள்ளிட்ட, தமிழீழ மக்கள் சார்பான சகல வெகுசன தொடர்பு சாதனங்களையும் நிர்மூலமாக்கி, தமிழீழ மக்களின் அனைத்து சுதந்திரங்களுக்கும் சமாதி கட்டிவிட்ட இந்திய அரசு, தமிழ்மக்களை துப்பாக்கி முனையில் நிறுத்தி வைத்துக் கொண்டு, உண்மைக்கு மாறானதும், தன் சார்பாக்கப்பட்டதுமான கருத்துக்களை, தனது வெகுசன தொடர்பு சாதனங்களினூடாகப் பரப்பி, தமிழீழ தமிழக மற்றும் வெளியுலக மக்களிடையே உண்மையை மூடி மறைத்து, பொய்யான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இவற்றைத் தவிர மிகவும் மோசமானதும், கேவல மானதுமான பல நடவடிக்கைகளைத் தனது இராணுவத்தின் மூலம் செய்துவிட்டு, அதற்கான பழியைத் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சுமத்தி தமிழ் மக்களிடையேயும், சர்வதேச ரீதியிலும் எமக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படுகின்றன.

இந்த வகையில் இந்திய இராணுவமானது தனது கைக்கூலிகளாகப் பயன் படுத்திவரும் ''திரீஸ்டார்'' போன்ற கும்பல்களையும், சமூக விரோதிகளையும் தம்முடன் இணைத்து கொலைகள் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி, அதற்கான பழியை எம்மீது சுமத்தி வருகின்றது. இந்த வகையில் சமூக நன்மதிப்புப் பெற்ற பலர் இனம் தெரியாத வகையில் கொல்லப்பட்டுள்ளனர். பலர் கடத்தப் பட்டுள்ளனர். இன்னும் சிலர் கொல்லப்பட்டதுமன்றி, அவர்களின் சடலங்கள், மின்கம்பங்களில், கட்டப்பட்டு ''விடுதலைப் புலிகளால் மரண தண்டனை வழங்கப் பட்டுள்ளது'' என்ற அறிவிப்பும் தொங்கவிடப்படுகின்றன. அண்மையில் காங்கேசன் துறையில் வைத்து இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்ட சீமெந்து தொழிற் சாலை ஊழியரான இளவாலையைச் சேர்ந்த டானியல் என்னும் இளைஞர் இந்திய

www.tamilarangam.net



இராணுவத்தால் சித்தரவதை செய்து கொல்லப்பட்ட பின்னர் ''விடுதலைப் புலிகளால் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டார்'' என்ற அறிவிப்புடன் மின் கம்பத்தில் கட்டப்பட்டிருந்ததையும், இதுபோன்ற பல சம்பவங்கள் கோப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இடம் பெற்றதையும், எம்மக்களுக்கு சில உதாரணங்களாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இவற்றைத் தவிர இந்திய இராணுவம் மறைமுகமாகவும், நேரடியாகவும் ''திறீஸ்டார்'' போன்ற சமூக விரோத சக்திகளைப் பயன்படுத்தி ஆயுத முனையில் கொள்ளை நடவடிக்கை களிலும், கப்பம் வாங்கும் நடவடிக்கைகளிலும், ஈடுபட்டு வருவதையும் இவ்வாறு கொள்ளையிடப்பட்ட பொருட்கள் இரு சாராருக்குமிடையே பங்கிடப்பட்ட பின்னர் இராணுவத்தால் தங்க நகைகளாக மாற்றப்பட்டு இந்தியாவுக்கு கொண்டு செல்லப் படுவதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். ஆனால் இவற்றுக்கான பழிகள் எல்லாம் இந்திய இராணுவத்தால் திட்டமிட்ட வகையில் எம்மீது சுமத்தப் படுகின்றன.

**எம்மக்களே!**

உண்மை நிலைமைகளை நீங்கள் அறிய முடியாதுள்ள இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி, ''எம்மை மக்கள் விரோதிகளாகக்'' காட்ட இந்திய இராணுவம் மேற்கொள்ளும் திட்டமிட்ட நடவடிக்கைகளின் உண்மை நிலைமைகளை உணர்ந்து கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கிறோம்.

**புலிகளின் தாகம்**
**தமிழீழத் தாயகம்!**

**வெல்க**
**தமிழீழம்!**

01-03-88

அரசியற் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

வெளியீடு :- பிரச்சார வெளியீட்டு வாரியம் — தமிழீழ விடுதலைப் புலிகள்
(தமிழீழத்தில் வெளியிடப்பட்ட துண்டறிக்கை).

---

(32-ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்னிடம் அழைத்து உடனடியாக சத்தம்கேட்ட இடத்திற்கு அனுப்பினேன்.

ஜொனி என்னை அழைத்தான். அங்கு சென்றபோது எங்கும் தூசி மயம், ஒரு பெரிய குழி, அதற்கருகில் கேடில்ஸ் சினுடைய கார் நொறுங்கிப் போய்க்கிடந்தது. இதற்கு 50 யார் தூரத்தில் லொரி நின்றது. லாரிக்குள் எட்டிப் பார்த்தேன். ஐந்து தோழர்கள் இறந்து கிடந்தார்கள். ஆம் தண்ணீர் நிரப்பிக்கொண்டிருக்கையில் பவுசர் வெடித்து விட்டது. ஆனால் அந்த இடத்தில் நின்று சம்பவத்தைப் பார்த்த யாரும் உயிருடன் இல்லை. பொன் அம்மான், கேடில்ஸ், வாசு, ரஞ்சன் ஆகியோர் அந்த இடத்துக்கு வந்ததாக தோழர்கள் கூறினார்கள். பவுசரில் தண்ணீர் நிரப்பும் போது தண்ணீர் சிறிது ஒழுகியதாம். அதை பொன் அம்மான் கேடில்ஸ்க்கும், வாசுவுக்கும் தெரிவித்து பொறியியலாளர் ரஞ்சனையும் அழைத்துக் கொண்டு பவுசர் நின்ற இடத்துக்குசென்றான். இன்னும் சிலர் தந்த தகவல்படி அவர்கள் அந்த துவாரத்தை ஒட்டுவதற்கு மின்சார இணைப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்ததாகவும் தெரிய வருகிறது. ஆனால் அங்கு நடந்தது என்ன என்பது யாருக்கும் தெரியாது. ஏனென்றால் அந்த கடைசிச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்த எவரும் இன்று உயிருடன் இல்லை. எல்லோரையும் தேடினோம். வாசுவின் பிஸ்டலும், அடையாள அட்டையும் கேடில்ஸ்சின் காற்சட்டையின் யும் ஒரு பகுதியும்தான் கிடைத்தது. பொன் அம்மானை அடையாளம் காணக்கூடிய வகையில் அவனுடைய உடலோ, உடலின் பகுதியோ, எந்தத்தடமும் கிடைக்கவில்லை ஈழத்தில் வீசிக்கொண்டிருக்கும் காற்றோடு காற்றாய் அவன் மறைந்துவிட்டான். அந்தத் தவறு எப்படி நேர்ந்தது. விடை கிடைக்கவில்லை. இன்றும் கிடைக்கவில்லை. இனி எப்போதும் கிடைக்கப் போவதுமில்லை.

—**கிட்டு.**

www.tamilarangam.net

# லெப். கேர்ணல் பொன்னம்மான்

1983-ம் ஆண்டுக்குப் பின் எம்முடைய இயக்கம் மிக்வும் வேகமாக வளரத் தொடங்கியது. ஆயிரக் கணக்கான இளைஞர்கள் எம் முடைய இயக்கத்தில் சேர்ந்து கொண்டிருந்தார்கள். ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கு பயிற்சியளித்து, அவர்களை நல்வழிப்படுத்தி, சாதாரண சராசரி இளைஞர்களுக்கே உரிய இளமைத்தனத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தவர் களை புரட்சியாளர்களாக்கி, உலகமே வியக்கக்கூடிய கெரில்லா வீரர்களாக உருவாக் கிய பெருமையின் பெரும்பகு திக்கு உரியவன் பொன் அம் மான் என்றால் மிகையாகாது.

ஏறத்தாழ மூவாயிரம் வீரர் களை உருவாக்கினான். அதா வது மூவாயிரம் வீரர்களுக்கு பயிற்சியளித்தான் என்றும் சொல்லலாம். பயிற்சியளிப் பதை விட புரட்சி வீரனை உருவாக்குவது என்பது பல பரிமாணங்களைக் கொண்டது. வெறுமனே ஆயுதப் பயிற்சி மட்டும் நல்ல புரட்சியாளனை உருவாக்கப் போதுமானது அல்ல என்பதை பொன் அம்மான் அடிக்கடி எடுத்துச் சொல்வான். வெறுமனே பயிற்சி கொடுக்கும் பயிற்சியாளனாக மட்டுமல்லாமல் அனைத்துத் தோழர்களுக்கும் தாயாகி, நல்ல உறவாகி வாழ்ந்தான், எனவேதான் எல்லோராலும் ''அம்மான்'' என்று செல்லமாக அழைக்கப்பட்டான்.

எமது பயிற்சிக் குழுவுக்கு பொறுப்பாளராக இருந்த வேளையிலேயே, எமக்கு வேண் டிய ஆயுதங்களை நாமே செய்துகொள்ள வேண்டும் என்ற துடிப்புடன் செயல் பட்டு, அதற்கென்று ஓர் தனிப் பிரிவை உருவாக்கி, கைக்குண்டு களை ஏராளமாகத் தயாரித் தான்.

அம்மானுடைய அந்த கைக் குண்டுகள் தயாரிக்கும் முயற்சி யில் அவனடைந்த அனுபவங் கள் எமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. வெளிநாடுகளில் தயாரிக்கப் படும் நவீன கைக்குண்டுகளுக்கு நிகராக அவனுடைய தயாரிப்பு கள் இருந்தன. அதைவிடவும் தானாகவே ஓர் புதிய வடிவத் தையும் உருவாக்கினான். அம்மான் வெடிமருந்து துறை யிலும் சிறந்து விளங்கினான் என்றால் மிகையாகாது. தமிழர் களை சிங்களவர்கள் பொது வாக ''பனங்கொட்டை'' என்று கேலி செய்வது பலகாலத்து வழக்கம். எனவே பனங்கொட் டையைப் போன்ற அமைப் பிலேயே தன்னுடைய கைக் குண்டுகளை தயாரித்தான். என்னிடம் பல தடவைகள் கூறி இருக்கின்றான். ''மச்சான் பனங்கொட்டை என்று எம்மை இழிவு செய்த வர்கள் பனங்கொட்டையைக் கண்டாலே பயப்படவேண்டும். எனவேதான் இந்த வடிவத்தை உருவாக்கினேன்'' என்றான்.

நான் இயக்கத்தில் சேர்ந்து சில மாதங்களில் அம்மானும் சேர்ந்தான். நான் இயக்கத்தில் சேர்ந்தவுடன், இயக்கத்தால் நடத்தப்படும் விவசாயப் பண்ணைக்கு அனுப்பப்பட் டேன். அங்கிருக்கும் போது தான் அம்மான் இயக்கத்தில் சேர்ந்தான். அம்மான் எப் போதும் கலகலப்புடன் காணப் படுவான். அது அவனுடைய தனி இயல்பு என்றே கூறலாம்; சில சமயங்களில் சினிமாக் களில் தோன்றும் நகைச்சுவை பாத்திரம் போன்று விளங்கு வான். தான் மட்டுமல்ல தன்னை சூழ உள்ளவர்களை யும், எப்போதும் சிரிக்கவைத் துக்கொண்டு இருப்பதே அவ னுடைய பொழுதுபோக்கு. சத்தியமாகச் சொல்கின்றேன், அவன் இருக்கும் இடத்தில் எப் போதும், எப்படியோ ஓர் சிரிப்புடனான சூழ்நிலையையே உருவாக்கி [illegible]ந்தான்.

விவசாயப் பண்ணையில் ஏறத்தாழ ஒருவருட காலம் சேர்ந்து பணியாற்றினோம். விவசாயம் செய்துதான் நாம் எம்முடைய தேவைகளைப் பெறவேண்டியிருந்தது. விவசா யப் பண்ணைகளில் எப்போதும் கடுமையாக உழைப்போம். உழைத்து சோர்ந்த மாலை வேளைகளில் பொன் அம்மான் தினமும் பாட்டு பாடுவான். அம்மானின் தாயார் சங்கீதத் தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். அம்மான் சங்கீதம் கற்றிரா விட்டாலும் நல்லாகவே பாடு வான். பாடல் மட்டுமல்ல பாடிக்கொண்டே நடித்துக் காட்டி சிரிப்புக்காட்டி ஒரு அட்டகாசமே செய்துவிடு வான்.

நானும் அம்மானும் தனித் திருக்கும் வேளைகளில் எம் முடைய விடுதலைப் போராட் டத்தின் எதிர்காலத்தைப்பற்றி விவாதிப்போம். கற்பனைகள் கூட செய்வோம். அதுமட்டு மல்ல எமது எதிர்கால நடவடிக் கையையிட்டு, சச்சரவுகூடப் பட்டுக்கொள்வோம். நாம் எமக் குத் தேவையான ஆயுதங்களை நாமாகவே தயாரிக்க வேண்டும் என்பதை பல காலம் சிந்தித்து

வந்தோம். 79-ம் ஆண்டு அப்பையா அண்ணன், பொன் அம்மான், அன்ரன், ஆகியோருடன் நானும் சேர்ந்து கைக் குண்டுகள் தயாரிக்கத் தொடங்கினோம். பலத்த இராணுவக் கெடுபிடிகளுக்கு நடுவில் ஓர் மறைவிடத்தில் எமது தொழிற்சாலை உருவாக்கப்பட்டது. இரும்பை உருக்கி வார்க்கக் கூடிய வசதி அச்சமயம் எம்மிடம் இல்லை. எனவே அலுமினியத்தினாலான கைக் குண்டுகளை உருக்கி வார்த்தோம்.

நால்வரும் மிகவும் பெருத்த சிரமத்தின் மத்தியில், முன் அனுபவம் எதுவுமில்லாமலேயே, ஓரளவு எமது தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் கைக்குண்டுகளை உற்பத்தி செய்தோம். பின்பு பல இடைஞ்சல்களால் அந்த வேலைத்தளம் மூடப்பட வேண்டி வந்து விட்டது. ஆனால் அன்றைய அந்த முயற்சியே நாம் பின்பு உலகமே வியக்கக்கூடிய வகையில் எமது உற்பத்திகளை உருவாக்குவதற்கு வழிகோலியது எனலாம். பிற்காலத்தில் பொன் அம்மான் HE - 36 போன்ற கைக் குண்டுகளை மிகவும் நேர்த்தியாக மிகப் பெரிய தொகையில் உருவாக்கினான். அன்ரன், கிளைமோர், பண்டிக்குட்டி, போன்ற நவீன வெடிகளை உருவாக்கினார்.

நானும் அப்பையா அண்ணாவும், மிகவும் சக்திவாய்ந்த பெரிய மோட்டார்களையும், குண்டுகளையும் தயாரித்தோம். இப்படியாக ஆரம்பகாலத்தில் இருந்தே எமது போராட்ட பணிகளை உறுதியாக முன்னெடுத்து வந்தோம்.

*1983*-ம் ஆண்டுக்கு பின் பொன் அம்மான், இயக்கத்தின் பயிற்சி குழுவுக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டபின் நான் யாழ் மாவட்ட பொறுப்பாளராகவும் பணியாற்றியதால் இருவரும் உறவாடக்கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை. சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமான எமது வீரர்களை உருவாக்கி இயக்க வரலாற்றில் பெரும் சாதனை படைத்தவன் பொன் அம்மான்.

*1986*-ம் ஆண்டின் பிற்பகுதியில் இருவரும் ஒன்றாக சந்தித்துக்கொண்டோம். அவ்வேளை



யில் யாழ்ப்பாணத்தில் உள்ள நாவற்குளி எனும் இராணுவ முகாம் மீது தாக்குதலை நடத்த நானும் என்னுடைய தோழர்களும் திட்டமிட்டுக் கொண்டிருந்தோம். இராணுவ முகாம் மிகவும் பலம்பொருந்திய வெளி அமைப்பைக் கொண்டிருந்தது. இராணுவ முகாமில் ஒருபக்கம் ஆறு ஓடிக்கொண்டு இருந்தது. அது கடல்நீர் உள்வாங்கிய பகுதி. சுற்றிவர நூறுயாருக்கும் மேலாக ஒரே வெளிப்பிரதேசம். வெட்டைவெளி. நாம் அப்பகுதியை கடந்து இராணுவ முகாமை அணுகுவது மிகவும் கடினம். அதைவிடவும், இராணுவ முகாமைச் சுற்றி நன்கு பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு மண்ணை சுவர்போல குவித்து வைத்திருந்தனர், அவர்களுடைய காவல் [illegible] உடைத்துக்கொ[illegible]குவது என்[illegible]ரமத்துக்[illegible] எமது [illegible]ப்பில் அதி[illegible]தை ஏ[illegible]த்தக் கூடி[illegible]ன முயற்சி. [illegible]வே அவர்[illegible] அதிர்ச்சியூட்டி அந்த [illegible] இருந்து மீண்டு [illegible] காவல்

www.tamilarangam.net



அரண்களை பலப்படுத்துவதற்கு முன்னர் நாம் தாக்கி உட்புகக் கூடியதாக திட்டத்தை உருவாக்கினோம்.

தினமும் அந்த இராணுவ முகாமுக்கு தண்ணீர் எடுத்துக் கொண்டு ஒரு பவுசர் செல்வது வழக்கம். அது வெளியாரின் வண்டி சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டிருந்தது. எனவே நாமும் அதைப் போலவே ஓர் பவுசர் வண்டியை தயாரித்து, அதன்(கீழ்) அரைவாசிப் பகுதிக்கு வெடிமருந்தை நிரப்பி, மேலே அரைவாசிப் பகுதிக்கு தண்ணீரைவிட்டு, நாம் திட்டமிட்ட நாளில் உள்ளே அனுப்பி வெடிக்க வைத்து, நாம் உட்புகுவது என்பது எமது திட்டம்.

பழைய வண்டியைப்போல் ஒரு புதிய வண்டியை தயாரிப்பது என்பது மிகவும் கஷ்டமான விடயம். அதிலும் அந்த மதிகெட்ட பவுசர் எங்கோ ஒரு இடத்தில் விபத்துக்குள்ளாகி ஒரு பக்கத்தில் நசுங்கியும் இருந்தது. எனவே நாம் செய்யும் வண்டியும் வாயில் காவலர்களைத் தாண்டிச் செல்லவேண்டி இருந்ததால் - அதே போல் நசுக்கப்பட வேண்டி இருந்தது. இயற்கையாக விபத்துக்குள்ளான வண்டியைப் போல் எமது வண்டியை மிகச் சிரமத்துக்குப் பின் உருவாக்கினோம். புதிதாக மை பூசிய எமது பவுசரை பழைய பவுசரைப் போல் உருமாற்றம் செய்யவேண்டும். ஏன் பழைய வண்டியில் ஏற்பட்டிருந்த துருப்பிடித்த பகுதிகூட எமது பவுசரில் இருந்தாகவேண்டும். அதை விடவும் பவுசர் இரு பகுதியாகப் பிரிக்கப்பட்டு கீழ் பகுதி வெடிமருந்து நிரம்பிய பகுதியாகவும், மேல் பகுதியில் தண்ணீர் நிரம்பிய பகுதியாகவும் தயாரித்தோம். ஏனென்றால் முகாம் வாயிலில் உள்ள காவல் அரணில் இருப்பவர்கள் பவுசரின் மேல் ஏறி மூடியைத் திறந்து தண்ணீரைப் பார்த்த பின்தான் உள்ளே அனுமதிப்பார்கள்.

இத்தனை சிரமங்களின் மத்தியிலும் அந்த பவுசரை மிக நேர்த்தியாகவடிவமைத்தோம். பவுசருக்கு வெடிமருந்தை இணைக்கும் பணியை பொன் அம்மான் எடுத்துக் கொண்டான். இம்முயற்சிக்கு வழி கோலி, அயராது உழைத்து வந்தவன் என் அருமைத் தோழன் கேடில்ஸ்தான். அவன் சாவகச்சேரிப் பகுதிக்கு பொறுப்பாளராக விளங்கியவன். மிகத் துல்லியமாக முகாமை வேவு பார்த்து, இராணுவ முகாமினது ஒவ்வொரு நடவடிக்கையையும், அவதானித்து வைத்திருந்தான். கேடில்ஸ்சும், வாசுவும் சேர்ந்து தான் இரவு பகலாக உழைத்து அந்த பவுசரை உருவாக்கினார்கள். அவர்களுக்கு துணையாக ரஞ்சன் எனும் பொறியியலாளர் ஒருவர் பணியாற்றினார். அவர் பொன் அம்மானின் உறவினரும்கூட, மிகுந்த மதிநுட்பம் வாய்ந்த ரஞ்சன் சில காலத்துக்கு முன்பு வாசுவோடு சேர்ந்து விமானமொன்றை தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டு வந்தார். முழுவதுமாக தன்னை எம்முடனேயே இணைத்துக் கொண்டவர்.

14-2-87 அன்று தாக்குதல் நடத்துவதாக இருந்தது. கெரில்லா தாக்குதல்கள் இரவு நடத்துவதுதான் எமக்கு மிகவும் உசிதமானவை ஏன் என்றால் தாக்குதல் தொடங்கியதும். இராணுவ கெலிகாப்டர்களும், குண்டுவீச்சு விமானங்களும் தகவல் கிடைத்து எம்மை தாக்கத் தொடங்கும். பகல் வேளையானால் மேலிருந்து கண்டுபிடித்து குண்டு வீசுவது அவைக்கு மிகவும் சுலபமானவிடயம். ஆனால் இரவு இராணுவ முகாமுக்கு தண்ணீர் கொண்டுசெல்ல பி. ப. 6-30 மணிக்குபின் அனுமதிக்கப்படுவதில்லை. எனவே கடைசி சந்தர்ப்பத்தை தேர்ந்தெடுத்தோம். 6-30மணிக்கு சண்டை தொடங்குமானால், சுமார் ஒரு மணி நேரத்தில் இருட்டடித்துவிடும். அதன்பின் எமக்கு மிகவும் பாதுகாப்பாகவே இருக்கும்.

முதல் நாள் இரவு, இரவாக பொன் அம்மான், வாசு, ரஞ்சன் ஆகியோர் மருந்தடைத்தனர். ''ஜெல்டிஙின்'' நச்சுத் தன்மை அவர்களை பாதித்தது. நான் பார்க்கும்போது மூவரும் சோர்ந்து காணப்பட்டனர். விடியும்போது பவுசர் வெடிமருந்து இணைக்கப்பட்டு தயாராக நின்றது. அம்மான் அவ்விடத்திலேயே தூங்கிவிட்டான். வாசுவும் நானும் வந்து தாக்குதல் குழுக்களை பிரித்து அவரவர்களுக்கு தேவையான பொருட்களை கொடுத்துக் கொண்டிருந்தோம். மூன்று பெரிய லொறிகள் தயார்படுத்தப்பட்டன. முகாமுக்குள் சென்ற பவுசர் வெடித்ததும், ஜொனி, கேடில்ஸ், சூசை தலைமையினான குழுக்கள் லொறிகளில் விரைந்து முகாமுக்குள் சுட்டுக் கொண்டே உட்புகுவார்கள். லொறியின் முன் புறமும், மேல்பக்கமும் மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டன. முதல் லொறியில் யேலே பரன் ரொக்கட் லோஞ்சருடன் நிற்பான் உட்புகும்போது, ரொட்கட்டால் வாயில் காவல் அரணை உடைத்தெறிவதாக திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

நேரம் பி. பகலை நெருங்கிக் கொண்டிருக்க தாக்குதல் குழுக்கள் தத்தமது நிலைகளுக்கு செல்லத் தொடங்கிவிட்டனர். பவுசரை அனுப்பும் பொறுப்பு பொன் அம்மான், கேடிலஸ்,வாசு ஆகியோரிடம் ஒப்படைக்கபட்டிருந்தது. நான் தாக்குதலை நடத்துவதற்காக சகலருடனும் வாக்கிடோக்கியில் தொடர்பு ஏற்படுத்தகூடிய வகையில் இடத்தை தெரிந்தெடுத்து அதற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

நான் ஐந்து மணியளவில் எல்லாக் குழுக்களையும் சரி பார்த்து வந்து கொண்டிருந்தேன். நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. நான் ஒரு குழுவினர் நின்ற வீட்டில் அவர்களை சரிபார்த்துக் கொண்டிருக்கையில் மிகப் பெரிய சத்தத்தை தொடர்ந்து பூமி ஒருமுறை அதிர்ந்தது. அதிர்ச்சி, வியப்பு, சற்றும் புரியவில்லை. நேரத்தை பார்த்தேன். சரியாக 5-30 ஆனால் நாம் 6-30க்குதான் வெடிக்க வைப்பதாக இருந்தது. எனவே பொன் அம்மானை பலதடவை வாக்கியில் கூப்பிட்டேன், கேடில்ஸ்சைக் கூப்பிட்டேன், வாசுவைக் கூப்பிட்டேன் பதில் இல்லை. பலதடவை அழைத்தேன் பதில் இல்லை, ஜொனியை அழைத்தேன் பதில் வந்தது. ஜொனியை

(29-ஆம் பக்கம் பார்க்க)

www.tamilarangam.net



இந்திய ராணுவத்தினர் பெண்களையும்
குழந்தைகளையும் ஈவிரக்கமின்றி
சுட்டு பதுங்கு குழிகளில் தள்ளி
விட்டுச் சென்ற கோரம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லெப். கேணல் புலேந்திரன் லெப். கேணல் சந்தோஷம் லெப். கேணல் அற்புதன்